# 1 விந்தைகள்

அலகு அறிமுகம்

"மனிதன் நலமுடன் வாழ்ந்திட.....

இயற்கை வளமுடன் இருந்திட வேண்டும்.."

இவ்வுலகம் பரந்து விரிந்த நிலப்பரப்புகளையும் அதன் நாற்புறமும் சூழப்பட்ட கடல்களையும் பச்சைப்பசேலென்ற காடுகளையும் எழில் கொஞ்சும் நீர் வீழ்ச்சிகளையும் சலசலத்து ஓடுகின்ற ஆறுகளையும் வளங்களாகக் கொண்டமைந்துள்ளது. அந்த வளங்களை அனுபவிக்கும் உரிமை மனிதனுக்கு மட்டுமல்ல. அண்டத்தில் வாழும் அனைத்து உயிர்களுக்குமாம். உண்ணுகின்ற உணவு முதல் குடிக்கின்ற நீர் வரை இயற்கையின் கொடையாகும். அத்தனை வளங்களையும் அள்ளித்தரும் இயற்கை இன்று அளவிட முடியா அச்சுறுத்தல்களை எதிர்நோக்கியுள்ளது.

எதிர்காலத் தலைமுறைக்கு நாம் விட்டுச் செல்வது பசுமையான இயற்கை வளங்களே! மனிதனின் சுயநலச்சிந்தனை இயற்கையை சீர்குலைத்து வருகிறது. இச்சிந்தனையை அகற்றி 'நலமுடன் வாழ இயற்கை இன்றிமையாதது' என்பதை உணர்ந்து செயல்படுவது நல்வாழ்வைத் தரும்.

இவ்வலகில் 'நீரின்றி அமையாது உலகு', 'நிலநோக்கு', 'குறிஞ்சி' என்ற மூன்று கருத்தலகுகள் இடம்பெற்றுள்ளன. 'நீரின்றி அமையாது உலகு' என்னும் முதல் அலகு கிராமவளமே நீரின்வளமை, தண்ணீரைக் காப்போம், சாயத்திரை ஆகிய மூன்று பாடப்பகுதிகளை உள்ளடக்கியது. இவை முறையே குடிநீரின் பாதுகாப்பைச் சுட்டுகின்றன.

இரண்டாவது கருத்தலகு நிலநோக்கு. இதில் நிலம் நாட்டின் நலம், கம்பராமாயணம் ஆகிய பாடப்பகுதிகள் இடம்பெற்றுள்ளன. இவை நிலச் சிறப்பையும் அழகையும் விளக்குகின்றன.

இந்த அலகைக் கற்பிக்கத் தேவையான காலம்
24 பிரிவேளைகள்

DRAFT

| கரு | துணைக் கரு | இலக்கிய வடிவங்கள் | கற்றல் இலக்குகள் | | | மொழிக் கூறுகள் | மொழி வெளியீட்டு வடிவங்கள் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | கருத்துகள் | திறன்கள் | மனப்பான்மைகள் | | | |
| சுற்றுச்சூழல் (விந்தைகள்) | நீர் வளம் (நொய்யல்)<br><br>நில வளம் (நிலமகள்)<br><br>மலை வளம் (மலையகம்) | • கட்டுரை<br>• புதுக்கவிதை<br>• புதினம்<br><br>• கம்பராமாயணம்<br>• இலக்கியக் கட்டுரை<br>• சிறுகதை<br><br>• புதுக்கவிதை<br>• சிறுகதை<br>• சிற்றிலக்கியம் | • உயிர்களின் வாழ்வாதாரமாக நீர்நிலைகள் விளங்குகின்றன<br>• நீர்நிலைகளைப் பாதுகாப்பது நமது கடமை<br>• இயற்கையோடு இணைந்த வாழ்க்கை இன்பத்தை அளிக்கின்றது.<br>• மலைவளம் நாட்டின் வளம் ஆகும். | • தரவுகளைப் பகுப்பாய்வு செய்து கட்டுரை எழுதுதல்.<br>• நிகழ்ச்சிகளைத் தொகுத்துப் பத்திரிகைச் செய்தி எழுதுதல்.<br>• நிகழ்ச்சிகளை வரிசைப் படுத்தி அறிவிப்பு தயார் செய்தல்.<br>• கருத்து, படைப்பு, கதாபாத்திரம் போன்றவற்றை மதிப்பீடு செய்து விமர்சனம் எழுதுதல்.<br>• ஒரு குறிப்பிட்ட தலைப்பில் முறையாக, இரண்டு பிரிவுகளாக கருத்துப் பகுப்பாய்வுச் செய்து விவாத குறிப்பு எழுதுதல்.<br>• ஒரு பொருள்/ கருத்து குறித்துப் பல்வேறு தரவுகளைத் திரட்டி ஒழுங்குப்பத்தி கட்டுரை எழுதுதல். | • இயற்கை வளங்களைப் பாதுகாக்க வேண்டும்.<br>• நீர்நிலைகளைப் பாதுகாக்க வேண்டும்.<br>• சுற்றுச்சூழல் மாசடைவதைத் தடுக்க/தவிர்க்க வேண்டும்.<br>• நீர் ஆதாரங்களை மேலாண்மை செய்து பயன்படுத்தும் முறைகளை அறிந்து கொள்ள வேண்டும்.<br>• மலைகளைப் பாதுகாக்க வேண்டும். | • தொகை<br>• வேற்றுமைத் தொகை<br>• வினைத் தொகை<br>• பண்புத் தொகை | • கட்டுரை<br>• பத்திரிகைச் செய்தி<br>• அறிவிப்பு<br>• விமர்சனம்<br>• விவாதக் குறிப்பு<br>• கட்டுரை | • மதிப்பீட்டுக் குறிப்புகளின் அடிப்படையில் மொழி வடிவங்களை மதிப்பீடு செய்தல்.<br>• சுயமதிப்பீடு<br>• குழு மதிப்பீடு |

DRAFT

## கற்றல் இலக்குகள்

❖ இயற்கை அழகை உணர்ந்து கவிதை எழுதுகிறார்கள்.

❖ நீர்நிலைகளின் இன்றைய நிலையைக் குறித்து பத்திரிக்கைக்குத் தலையங்கம் எழுதுகிறார்கள்.

❖ நீர்நிலைகளைப் பாதுகாக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி பல்வேறு செயல்பாடுகளில் ஈடுபடுகிறார்கள்.

❖ 'மலைகள் நாட்டின் அரண்' என்பதை உணர்ந்து கட்டுரை எழுதுகிறார்கள்.

❖ சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி கடிதம் எழுதுகிறார்கள்.

❖ கதையை வாசித்து நாடக வடிவில் எழுதுகிறார்கள்.

❖ இயற்கையைப் பாதுகாக்கும் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் உறுதிமொழி தயார்செய்கிறார்கள்.

## கற்றல் கருவிகள்

- பாடநூல்
- ஆசிரியர் பனுவல்
- கரும்பலகை
- காணொளிக்காட்சிகள்
- நூலகம்
- செய்தித்தாள்கள்
- இதழ்கள்
- சார்ட் (விளக்கப்படம்)
- படங்கள்

DRAFT

## நுழைவுச் செயல்பாடு

- ஆசிரியர் மாணவர்களிடம் தங்களுக்குப் பிடித்தமான இயற்கைக் காட்சிகளைப் பற்றி கூறும் கவிதைகள்/திரையிசைப்பாடல்களைப் பாடக் கூறுதல்.
- காணொளியில் இயற்கைப் பற்றிய பாடல் ஒன்றை காண்பித்தல்.

  "நதியே நதியே ………………. காதல் நதியே …………..

  நீயும் பெண்தானே …………………."

  "பச்சைக்கிளிகள் தோளோடு….."

  பாட்டுகுயிலோ மடியோடு ......"

  – என்ற பாடல் காட்சிகளைக் காண்பித்தல்.
- மாணவர்கள் தாங்கள் அறிந்த இயற்கை காட்சிகள், நீர்நிலைகள், மலைக்காட்சிகள் பற்றி கூறச்செய்தல்
- மாணவர்கள் தங்கள் அறிந்த நீர்நிலைகள் பற்றியும் மலைகளைப் பற்றியும் அவற்றின் அழகைப் பற்றியும் கூறுதல்
- ஆசிரியர் ICT யின் உதவியோடு பல்வேறு காட்சிகளைக் காண்பித்தல்
- பாடல் வரிகள், மேற்கோள்கள் ஆகியவற்றைக் காண்பித்து கலந்துரையாடல் நடத்துதல். மாணவர்கள் கூறிய கருத்துகளை ஆசிரியர் கரும்பலகையில் எழுதுதல். இன்றைய காலகட்டத்தில் இயற்கை வளங்கள் பல்வேறு அழிவுகளுக்கு உள்ளாகிறது. இதனைத் தடைசெய்து இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் மனநிலையை மாணவர்கள் பெற வேண்டும் எனக்கூறி பாடப்பகுதிக்குள் அழைத்துச் செல்லுதல்.

மாணவர்கள் மலை, காடு, விவசாய நிலம், ஆறு, குளம் பூங்காக்கள் இவற்றின் அழகானக் காட்சிகளைக் கூறுதல். ஆசிரியர் ICT வழி பல்வேறு இயற்கைக் காட்சிகளைக் காண்பித்தல். பாடல்வரிகள், மேற்கோள்கள் இவற்றையும் காண்பித்து, சிறு கலந்துரையாடல் நடத்துதல். மாணவர்கள் கூறிய கருத்துகளை ஆசிரியர் மேன்மைப்படுத்தி கரும் பலகையில் அல்லது தட்டச்சு செய்து திரையில் காண்பித்தல். இயற்கை அன்றைய காலத்தில் பாதுகாக்கப்பட்டது. இன்று இயற்கை பல்வேறு சுரண்டலுக்கு உள்ளாகி வருகிறது. இதனைத்தடுத்து நிறுத்தி இப்புவியைப் பாதுகாக்கும் மனநிலையை மாணவர்கள் பெறவேண்டும் எனக்கூறி பாடப்பகுதிக்குள் அழைத்துச் செல்லுதல்.

DRAFT

# பாடப்பகுதிகள்

**விந்தைகள்**

**நொய்யல்**

- கிராம வளமே நீரின் வளமை
- தண்ணீரைக் காப்போம்
- சாயத்திரை

**நிலமகள்**

- கம்பராமாயணம்
- நாட்டின் நலம்
- நிலம்

**மலையகம்**

- எழில்மிகு ஏற்காடு
- உண்ணாமலை
- குற்றாலக் குறவஞ்சி

## கிராம வளமே நீரின் வளமை

- பாடப்பகுதியை வாசிக்கச் செய்து, கலந்துரையாடல் நடத்துதல்
- நீரின் முக்கியத்துவத்தை மக்கள் உணராமல் போனதே இன்றையத் தவிப்புக்குக் காரணம் என்பதை உணரச் செய்தல்
- நீர்நிலைகளின் தற்போதைய நிலையைக் குறித்து ஆசிரியர் சில வினாக்கள் எழுப்புதல், கலந்துரையாடல் நடத்துதல்
- நீர் நிலைகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தை மாணவர்களின் மனதில் உருவாக்குதல்
- அதனடிப்படையில் சொற்பொழிவுக் குறிப்பு தயாரிக்கச் சொல்லுதல்

## செயல்பாடு 1

சொற்பொழிவுக் குறிப்பு தயார் செய்தல்.

ஆசிரியர் சொற்பொழிவு பற்றி சில பொதுவான கருத்துகளை வழங்குதல்.

சொற்பொழிவின் கூறுகள்

DRAFT

- → பேசவிருக்கும் பொருள் பற்றிய கருத்துகளைத் தொகுத்தல்
- → குறிப்புகளை வரிசைப்படுத்துதல்
- → பொருத்தமான முறையில் வரிசைப்படுத்துதல்
- → மேடையேறுவதற்கு முன் குறிப்புகளைப் பார்த்தல், கவனத்தைச் சிதறவிடாமலிருத்தல்
- → பேசப்போகும் தலைப்பைக் கூறுதல்
- → கவனத்தை ஈர்க்கும் விதமாக முகமன் கூறுதல்
- → கருத்திற்கேற்ப குரல் ஏற்றத்தாழ்வுடன் பேசுதல்
- → பொருத்தமான மெய்ப்பாடுகளை வெளியிடுதல்
- → மேற்கோள், சான்றுகள் கூறும்போது குரலில் அழுத்தம் கொடுத்தல்
- → எடுத்துக்கொண்ட தலைப்பில் பொருளை நிறுவுதல்

இவ்வலகிலிருந்து புரிந்துகொண்ட கருத்துகள் அடிப்படையில் சொற்பொழிவிற்குத் தேவையான மேற்கோள்கள் மற்றும் தரவுகளை நூலகத்திலிருந்து திரட்டச் செய்தல்.

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- ➢ கருத்துத்தெளிவு
- ➢ மொழிநடை
- ➢ உச்சரிப்பு
- ➢ மேற்கோள் பயன்பாடு
- ➢ சுருங்கக் கூறுதல்

## செயல்பாடு 2

### விளக்கக் குறிப்பு

"நீரின்றி அமையாது உலகு எனின் யார்யார்க்கும்
வானின்றி அமையாது ஒழுக்கு"

இத்திருக்குறளின் கருத்து வெளிப்படும் வகையில் விளக்கக் குறிப்பு எழுதுதல்

திருக்குறள் தொடர்பான செய்திகளை மாணவர்களிடம் வினாக்கள் மூலம் கேட்டறிதல். ஒரு சில விளக்கங்களை ஆசிரியர் வகுப்பில் கூறுதல். ஒவ்வொரு

DRAFT

திருக்குறளும் அரியதொரு கருத்தினை விளக்கிச் செல்லும் என்பதை மாணவர்களுக்குப் புரியச் செய்தல். அதனடிப்படையில் விளக்கக் குறிப்பு தயார் செய்தல்.

குறள் :

நீரின்றி அமையாது உலகு எனின் யார்யார்க்கும்
வானின்றி அமையாது ஒழுக்கு

விளக்கம் :

யாராக இருந்தாலும் இவ்வுலகில் நீர் இல்லாமல் உலக வாழ்க்கை நடைபெறாது. எனவே, மழைவளம் இல்லாமல் போனால் இவ்வுலகில் ஒழுக்கமும் இல்லாமல் போதும்.

மனிதனின் அன்றாடத் தேவைகளுள் நீர் இன்றியமையாத ஒன்றாக இருக்கிறது. வள்ளுவரும் நீரின்றி அமையாது உலகு என்கிறார். பழங்காலத்தில் மனிதர்கள் நீர்நிலைகளுக்கு அருகாமையில் தனது குடியிருப்பை அமைத்துக்கொண்டனர். நீரினைத் தெய்வமாகக் கருதி வழிபட்டனர். இன்றோ நீர் பல்வேறு காரணங்களால் மாசடைந்து வருகிறது. நீரின்றி எந்த உயினமும் வாழ இயலாது என்பதை ஒவ்வொரு மனிதனும் உணர்ந்து நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது முக்கியமானதாகும்.

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- கருத்துத்தெளிவு
- மொழி நடை
- விளக்க உரை

## செயல்பாடு 3

**மழைநீரைச் சேகரிப்பதற்குப் பள்ளிகளில் கடைபிடிக்கப்படும் வழிமுறைகளை வரிசைப்படுத்துதல்**

- → பள்ளிக்கூடக் கூரைகள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் மழைநீர் சேகரிப்புக்கு சிறந்த இடமாகும்.
- → மழைநீரைச் சேகரிக்க கூரையின் மேல் ஸ்பிளாஸ் பிளாக் வைக்கப்படும்.
- → மழைநீர் சேகரிக்கும் குழிகள் அமைக்கப்படும்.
- → நீர்ப் பாதுகாப்பின் முக்கியத்துவத்தைக் குறித்து மாணவர்களுக்குக் கற்பித்தல்.

DRAFT

→ நிலத்தடித் தொட்டிகளில் கூரையின் மீது விழும் மழைநீரைச் சேகரித்தல்.

→ ஆசிரியர் மழைநீரின் சேமிப்பு முறையை விளக்குதல். மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து குறிப்பேட்டில் எழுதச் செய்தல்.

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- வாக்கிய அமைப்பு
- சொல்லாட்சி
- கருத்து

## தண்ணீரைக் காப்போம்

### நுழைவுச் செயல்பாடு

ஆசிரியர்கள் மாணவர்களிடம் தங்கள் அன்றாடத் தேவைகளுக்குப் பயன்படுத்தும் தண்ணீர் எங்கிருந்து கிடைக்கிறது? என்ற வினாவைக் கேட்டு கலந்துரையாடல் நடத்துதல்.

ஆறு, குளம், குட்டை, ஊற்று, கிணறு, ஆழ்த்துளைக்கிணறு, குழாய்.... என்று மாணவர்கள் கூறும் கருத்துகளை ஆசிரியர் கரும்பலகையில் எழுதுதல். ICT வழி நீர்நிலைகளைக் காண்பித்தல். அன்றைய நீர்நிலைகளையும் தற்கால நீர்நிலைகளையும் காண்பித்து கலந்துரையாடல் நடத்துதல். அதனடிப்படையில் பாடப்பகுதிக்குள் நுழைதல்.

மாணவர்களை கவிதையை வாசிக்க வைத்தல். கடினமானச் சொற்களுக்குப் பொருள் கண்டறிதல். ஆசிரியரும் பாடலை வாசித்துக்காட்டுதல். பாடலில் இடம்பெற்றுள்ள நீர்நிலைகளைப் பட்டியலிடுதல்.

### செயல்பாடு 4

**நயம்பாராட்டி எழுதுதல்**

**மையக்கருத்து**

நமது முன்னோர்கள் மழைநீரைப் பல்வேறு முறைகளில் பாதுகாத்தனர். அதனைக் குடிப்பதற்கும் விளைச்சலுக்கும் பயன்படுத்தினர். கால்வாய், அகழி, இலஞ்சி, குட்டை, கூவல், ஓடை, சுனை, கிணறு, குளம், ஏரி என்று பல்வேறு பெயர்களில் தண்ணீரைத் தேக்கி வளமாக வாழ்க்கை நடத்தினர். மற்ற உயிரினங்களும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தன.

DRAFT

**மோனை நயம்:**

பாடலில் அடிதோறும் முதலெழுத்துக்கள் ஒன்றி வருவது மோனை எனப்படும்.

எ.கா.

நிலத்தடியில் நீர்நிறைந்திருப்பதற்கே
நிலம் மீது பெய்கின்ற மழையின் நீரைப்

**எதுகை நயம்:**

பாடலில் அடிதோறும் இரண்டாவது எழுத்துகள் ஒன்றி வருவது எதுகை எனப்படும்.

எ.கா.

நாற்றிசையும் கோபுரங்கள் காணும்கோயில்
நற்றலத்து நீர்நிலையைக் குளமாம் என்றார்.

**அணிநயம்:**

ஒன்றை அதனோடு தொடர்புடைய இன்னொன்றுடன் ஒப்பிட்டுக் கூறுவது உவமை எனப்படும். போல, போன்ற, ஆகிய உவம உருபுகள் மறைந்தோ, வெளிப்பட்டோ காணப்படுவதாகும். ஆகவே, இக்கவிதையில் உவமை அணி பயின்று வந்துள்ளது.

எ.கா.

வேரினையே பிடுங்கி மரம் சாய்த்தல் போல

வேரைப் பிடுங்கினால் மரம் சாய்ந்து விடும் அதுபோல நிலத்தை அழித்து வறட்சியை ஏற்படுத்துகிறோம்.

## செயல்பாடு 5

பண்புத்தொகையை அறிதல்

பண்புத்தொகை என்பது பண்புப் பெயரைச் சேர்ந்து வரும் பெயர்சொல். ஒரு பண்பைக் குறிப்பது பண்புப்பெயர். வண்ணம், வடிவம், அளவு, சுவை முதலியன பண்பு.

- ஆசிரியர் பண்புத் தொகையைப் பற்றி மாணவர்களுக்கு எடுத்துரைத்தல்.
- பண்புத்தொகைச் சொற்களைக் கேட்டறிதல்.
- பாடப்பகுதியில் இடம்பெறும் ப.தொ.சொ எடுத்தெழுதச் செய்யுதல்.

| | |
|---|---|
| செழுநீர் | செழுமை + நீர் |
| பசுந்தமிழ் | பசுமை + தமிழ் |
| நாற்றிசை | நான்கு + திசை |
| எழிற்றமிழ் | எழில் + தமிழ் |

## செயல்பாடு 6

நிலத்தடி நீரைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை ஆசிரியர் கலந்துரையாடிக் குறிப்பாக எழுதச் செய்தல்.

- → மழைநீர் சேகரிப்பு
- → குளங்கள், ஏரிகள், கால்வாய்களைத் தூர் வாருதல்
- → நீர்த்தேக்கத்தை விரிவுப்படுத்துதல்
- → மழைநீர் பிடிக்கும் குழாய்கள் மற்றும் வடிகட்டும் அமைப்புகளை வீடுகளில் நிறுவுதல்.

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- ➢ கருத்து
- ➢ மொழிநடை
- ➢ சுருங்கச் சொல்லுதல்

- → மாணவர்களைக் குழுவாகப் பிரித்து கலந்துரையாடச் செய்தல்.
- → கலந்துரையாடியக் கருத்துகளை வெளியிடுதல்.
- → வெளியிட்ட கருத்துகளின் அடிப்படையில் பாடப்பகுதியை விமர்சனம் செய்து எழுதச் செய்தல்.
- → சிறந்த விமர்சனக் குறிப்பை வகுப்பில் வெளியிடுதல், பாராட்டுதல்

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- ➢ மையக்கருத்து
- ➢ விமர்சன பாங்கு
- ➢ சமூகத்தொடர்பு
- ➢ வடிவம், மொழிநடை

DRAFT

# சாயத்திரை

## நுழைவுச் செயல்பாடு

ஆசிரியர் ICT பயன்படுத்தி பல்வேறு வகையான நீர்நிலைகளின் காட்சிகளை மாணவர்களுக்குக் காண்பித்தல்

- நீர் இல்லாத உலகத்தை நம்மால் கற்பனை செய்ய முடியுமா?
- இன்றைய காலகட்டத்தில் நீர்நிலைகளின் நிலை என்ன?
- நீரின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளீர்களா?
- இவற்றின் அடிப்படையில் கலந்துரையாடி சாயத்திரை என்ற பாடப்பகுதியின் மையக்கருத்தை விளக்குதல்.

## செயல்பாடு 7

**புகார்க் கடிதம் எழுதுதல்**

→ ஆசிரியர் மாணவர்களிடம் அவர்கள் வாழும் பகுதியில் உள்ள நீர்நிலைகளைப் பற்றி வினாவுதல்

→ அதில் மக்கள் எவ்வாறெல்லாம் அசுத்தம் செய்கிறார்கள் என்பதை வினாவுதல்

→ மாணவர்கள் கூறிய கருத்துகளைக் கரும்பலகையில் எழுதுதல்

→ பிரச்சனையான கருத்துகளை மையமாகக் கொண்டு புகார்க் கடிதம் தயார் செய்யச் செய்தல்

→ புகார்க் கடிதத்தில் இடம்பெற வேண்டிய படிநிலைகளை ஆசிரியர் விளக்குதல்

→ ஊராட்சி மன்றத் தலைவருக்குப் புகார் கடிதம் எழுதுதல்

→ மாணவர்கள் எழுதிய கடிதத்தை வெளியிட்டு மேன்மைப்படுத்துதல்

### மதிப்பீட்டுக் குறிப்புகள்

➢ வடிவம்

➢ கருத்து

➢ சுருங்கச் சொல்லுதல்

➢ உள்ளடக்கம்

DRAFT

# நிலமகள்

## நுழைவுச் செயல்பாடு

ஆசிரியர் ICT பயன்படுத்திப் பசுமையான வயல்வெளிக் காட்சிகளையும் தொழிற்சாலைக்காட்சிகளையும் காண்பித்தல். இரண்டு காட்சிகளிலும் வெளிப்படும் கருத்துகளைப் பட்டியலிடச் செய்தல். மாணவர்கள் கூறும் கருத்துகளை ஆசிரியர் கரும்பலகையில் எழுதுதல் / தட்டச்சு செய்து திரையில் காண்பித்தல்

| வயல்காட்சி | தொழிற்சாலை |
|---|---|
| இயற்கை பச்சைப் பசேலென்று காட்சியளிக்கிறது. | அதிக இரைச்சல் |
| வயலில் நெல் விளைந்ததால் பறவைகளின் சலசலப்பு காணப்பட்டது. | புகை வெளியேறுவதால் காற்றும் வாயுமண்டலமும் மாசடைகிறது. |
| குளிர்ச்சியான சுற்றுச்சூழல் உருவாகிறது | அதிகமான வெப்பம் ஏற்படுகிறது. |

இதுபோன்று மாணவர்கள் கூறிய கருத்துகளை ஆசிரியர் திரையில் காண்பித்து கலந்துரையாடல் நடத்துதல். இன்று விவசாயமும் விளைநிலங்களும் பல்வேறு காரணங்களால் அழிக்கப்பட்டு வருகின்றன. இதை தடைசெய்வது நமது கடமை என்ற கருத்தை மாணவர்களுக்கு எடுத்துரைத்துப் பாடப்பகுதிக்குள் நுழைதல்.

# கம்பராமயணம்

## செயல்பாடு 8

- ஒரே பொருளைத் தரும் பல்வேறு சொற்களைக் கண்டறிந்து பட்டியலிடுதல்.
- 'கம்பராமாயணப்' பாடலை ஆசிரியர் சீர் பிரித்து வாசித்தல்.
- மாணவர்களை வாசிக்கச் செய்தல்.
- கடினமானச் சொற்களின் பொருளைக் கண்டறிதல்.
- பாடலில் இடம்பெற்றுள்ள ஒரே பொருளைத் தரும் சொற்களைக் கண்டறிந்து பட்டியலிடச் செய்தல்.

DRAFT

| சொற்கள் | பொருள் | மதிப்பீட்டுக் குறிப்புகள் |
|---|---|---|
| அரவம்<br>அமலை<br>தமரம்<br>ஓதை<br>துழனி | ஓசை | ➢ சொற்களை வரிசைபடுத்துதல்<br>➢ வடிவம் |

## நாட்டின் நலம்

### நுழைவுச் செயல்பாடு

→ ஆசிரியர் மருதநிலக் காட்சிகளை ICT மூலம் காண்பித்தல்.

→ அக்காட்சிகளில் வரும் இயற்கை அழகை மாணவர்களை இரசிக்கச் செய்தல்.

→ மாணவர்களிடம் நாட்டின் நலம் பாடப்பகுதியிலுள்ள கம்பர் கூறும் கோசல நாட்டின் இயற்கை அழகை வாசிக்கச் செய்தல்.

→ அதில் கூறப்பட்டுள்ள இயற்கைக் காட்சிகளை ஆசிரியர் வருணித்துக் கூறுதல்.

### செயல்பாடு 9

வருணனைக் குறிப்பு எழுதுதல்.

→ பாடப்பகுதியை வாசித்து அதில் இடம்பெற்ற இயற்கை அழகை அழகுபட கூறச் செய்தல்.

→ பின் அவற்றைக் குறிப்பாக எழுதச் செய்தல்.

→ குறிப்புகளை முறையாகத் தொகுத்தல்.

→ அவற்றை வர்ணித்து மேம்படுத்தி எழுதுதல்

**மதிப்பீட்டுக் குறிப்பு**

➢ வர்ணனை சொற்கள்

➢ கருத்துத்தொடர்பு

➢ மொழிநடை

DRAFT

## செயல்பாடு 10

### விவாதக் குறிப்பு எழுதுதல்

ஆசிரியர் விவாதக் குறிப்பு பற்றி சில பொதுவான கருத்துகளை மாணவர்களுக்கு வழங்குதல்.

- → பேசவிருக்கும் பொருளைப் பற்றி நன்கு அறிந்துகொள்ளுதல்
- → குறிப்புகளை வரிசைப்படுத்துதல்
- → பேசவிருக்கும் கருத்தை முன்வைத்து முகமன் கூறுதல்
- → விவாதக் கருத்தைத் தெளிவுப்படுத்துதல்
- → நன்மைகளையும் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தல்
- → மேற்கோள் / சான்றுகளைக் கூறி நிறுவுதல்

மனிதனின் இன்றியமையாத தேவையை நிறைவு செய்வது நிலமாகும். நிலவளம் ஒரு நாட்டின் வளம். போன்ற கருத்துகளை முன்வைத்து விவாதக் குறிப்பு தயார் செய்யச் செய்தல்.

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- ➢ கருத்துத்தொடர்பு
- ➢ மேற்கோள் பயன்பாடு
- ➢ சமகாலப்போக்கு
- ➢ மொழிநடை

## நிலம்

- → 'நிலம்' என்னும் சிறுகதையை மாணவர்கள் வாசித்தல்.
- → ஆசிரியரும் ஏற்ற இறக்கத்துடன் வாசித்துக்காட்டுதல்.
- → சிறுகதையின் மையக்கருத்தைக் கூறச்செய்தல்.
- → ஆசிரியர் மேன்மைபடுத்திக் கூறுதல்.
- → விவசாயத்தின் முக்கியத்துவத்தை சிறுகதை வழியாகப் புரியச் செய்தல்.

DRAFT

## செயல்பாடு 11

**பண்புநலன் எழுதுதல்.**

சிறுகதையில் இடம்பெறும் கதாப்பாத்திரப் பண்புநலன்களை எழுதச் செய்தல்.

விவசாயத்தையும் விளைநிலத்தையும் பாதுகாத்து தனது வாழ்நாள் முழுவதும் விவசாயம் செய்தவர் சூழ்நிலைக் காரணமாக நிலத்தை கந்தசாமி என்பவரிடம் விற்றுவிட்டு, தனது மகனுடன் நகரத்தில் வாழ்ந்து வருகிறார். நகரத்தில் இருந்தாலும் மனம் முழுவதும் கிராம வாழ்க்கையைச் சுற்றிசுற்றி வந்தது. கந்தசாமி நிலத்தை விற்க முடிவு செய்ததை அறிந்து கிராமத்திற்கு ஓடுகிறார். தனது கையை விட்டுப்போன நிலத்தில் தனக்கு உரிமை இல்லை என்பதை உணர்ந்தும் கூட அதனை தடுக்க வேண்டும் என்கிற எண்ணத்துடன் கிராமத்திற்குச் செல்கிறார். கந்தசாமியிடம் நிலத்தை விற்க வேண்டாம் என்று கூறுகிறார். காலத்திற்கு ஏற்ப வாழாமல் தனது தாய்மண்ணான விவசாய நிலத்தை காப்பாற்ற முயற்சி செய்யும் விவசாயியின் பாத்திரச் சிறப்பு மிகவும் பாராட்டுதலுக்குரியது

### மதிப்பீட்டுக் குறிப்புகள்

- கதாப்பாத்திரச் சிறப்பு / பண்புநலன்களைச் சுட்டிக் காட்டுதல்
- கதைக்கருத்து
- சொல்லாட்சி

## செயல்பாடு 12

**உரையாடல் எழுதுதல்.**

→ மாணவர்களுக்கு ICT மூலம் ஒலிச்சித்திரம் ஒன்றைக் கேட்க செய்யலாம்.

→ இதன் தொடர்ச்சியாக நிலம் பாடப்பகுதியின் கதையைக் கூறச் செய்தல்.

→ இக்கதையை ஒலிச்சித்திரத்தில் கேட்டது போல் உரையாடலாக மாற்றி எழுதச் சொல்லுதல்.

→ ஆசிரியர் மாணவர்களுக்கு உதவுதல்

DRAFT

### மதிப்பீட்டுக் குறிப்பு

- சொல்லாட்சி
- கருத்துக்கோர்வை
- வாக்கிய அமைப்பு
- பேச்சுத்திறன்

## மலையகம்

### நுழைவுச் செயல்பாடு

- ஆசிரியர் மாணவர்களிடம் மலைப்பயணம் செய்த அனுபவங்களைச் சிறுசிறு வினாக்கள் மூலம் கேட்டறிதல்.
- மலையைப் பார்த்ததுண்டா?
- உங்களுக்குத் தெரிந்த மலைகளின் பெயர்களைக் கூறுங்கள்?
- மலையில் என்னென்ன பார்த்தீர்கள் / இருக்கும்?

– போன்ற வினாக்களை வினாவுதல்

"மலைச்சாரல் வந்து தமிழ்பேசுதே"
"மலையோரம் வீசும் காற்று"

"குற்றால அருவியிலே குளித்தது போல் இருக்குது" இதுபோன்ற திரையிசைப்பாடல் வரிகளை ஆசிரியர் பாடுதல் ICT வழி மலையோரக் காட்சிகள், அருவிகள், காடுகள், மரங்கள் இவற்றைக் காண்பித்து கலந்துரையாடல் நடத்தி அதனடிப்படையில் பாடப்பகுதிக்குள் நுழைதல்.

## எழில்மிகு ஏற்காடு

### செயல்பாடு 13

**உறுதிமொழி தயார் செய்தல்**

மலைகளின் பயன்களைப் பாடல்கள் வழி மாணவர்கள் அறிந்துகொள்ளுதல். கலந்துரையாடல் நடத்துதல், நூலகங்கள் வழியும் ICT வழியும் மலைகளின் சிறப்புகளையும் இன்றையமலைவளத்தையும் அறிந்துகொண்டு அதனடிப்படையில் மலைகளை அழிவில் இருந்து காக்கும் பொருட்டு உறுதிமொழி தயார்செய்தல்.

DRAFT

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- வடிவம்
- மொழிநடை
- தன்வினை வாக்கியங்களாக எழுதுதல்.
- சுருக்கம்/தெளிவு
- சூழல்/நிகழ்வு தெளிவு இடம்பெறும்படி எழுதுதல்.

## உண்ணாமலை

### செயல்பாடு 14

**பத்திரிகைத் தலையங்கம் எழுதுதல்**

- ஆசிரியர் மாதிரிப் படிவங்களை மாணவர்களுக்கு வழங்குதல்
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்தல்
- குறிப்பிட்ட தலைப்பைக் குழுக்களுக்கு வழங்குதல்
- தலையங்கத்தில் இடம்பெற வேண்டிய செய்திகளைக் கொடுத்து கலந்துரையாடச் செய்தல்.
    - தலைப்பு
    - பிரச்சனைகளை அலசி ஆராய்தல்
    - காரண காரியத் தொடர்பு
    - தீர்வு

மாணவர்கள் கலந்துரையாடி எழுதிய கருத்துகளைக் குறிப்பேட்டில் எழுதச் செய்தல்.

- தலையங்கத் தலைப்பைத் தேர்வு செய்தல்.
- பிரச்சனைகளைக் கண்டறிதல்.
- காரண காரியங்களை அலசி ஆராய்தல்.
- பிரச்சனைகளுக்கான தீர்வுகளைக் கண்டறிதல்.
- ஆசிரியர் அனைத்து மாணவர்களின் பங்களிப்பை உறுதி செய்தல்.

DRAFT

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- பொருத்தமான தலைப்பு
- வடிவம்
- மொழிநடை
- காரணகாரியத் தொடர்பு
- பிரச்சனைக்கான தீர்வு

## குற்றாலக் குறவஞ்சி

### செயல்பாடு 15

குற்றாலக் குறவஞ்சி குறிப்பிடும் மலைகளின் பெயர்களை வரிசைப்படுத்துதல்.

ஆசிரியர் சிற்றிலக்கியங்களை அறிமுகம் செய்தல்.

**சிற்றிலக்கியங்கள்**

**விளக்கம்**

தமிழ் இலக்கியங்கள் பேரிலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள் என இருவகைப்படும்.

பாட்டுடைத் தலைவனின் வாழ்வின் சிறுகூறினை மட்டும் எடுத்துக்கொண்டு அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்னும் நான்கு உறுதிப் பொருள்களில் ஏதேனும் ஒன்று அமையப்படுவது சிற்றிலக்கியம்.

இது தொண்ணூற்றாறு வகைப்படும்.

| சிற்றிலக்கிய வகைகள் சில |
|---|
| பள்ளு, உலா, தூது, பிள்ளைத்தமிழ், குறவஞ்சி, கலம்பகம், கோவை, அந்தாதி, மடல், மாலை, பரணி போன்றவைகள். |

சிற்றிலக்கிய வகைகளில் ஒன்று குறவஞ்சி. குறத்தி குற்றால மலைவளத்தைப் பற்றிக் கூறுவது. குற்றால மலையின் சிறப்புகளை எடுத்துக் கூறுவதால் திருக்குற்றாலக் குறவஞ்சி எனப்பெயர் பெற்றது.

- → ஆசிரியர் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்தல்.
- → குறவஞ்சிப் பாடலின் மையக் கருத்தை வாசித்துக் கூறச்செய்தல்.
- → கடினமான சொற்களின் பொருளைக் கண்டறிதல்.

DRAFT

→ குழுக்களடிப்படையில் பாடலில் இடம்பெற்ற மலைகளின் பெயர்களை எழுதி, வகுப்பில் வெளியிடச் செய்தல்.

→ ஆசிரியர் மேம்படுத்துதல்.

**மலைகள்**

திரிகூடமலை
கயிலைமலை
சயிலமலை
கொல்லிமலை
பழநிமலை
இமயமலை
சாமிமலை
வேள்விமலை

### மதிப்பீட்டுக் குறிப்புகள்

- கருத்து
- இனம் காணுதல்
- ஒழுங்குபடுத்துதல்

## வளப்பகுதி

**பாடல் பொருள்**

**கம்பராமாயணம் செய்யுள் பகுதியின் பொருள்:**

### பாலகாண்டம் – நாட்டுப்படலம்

மருதநில வருணனை இப்பாடலில் இடம்பெற்றுள்ளது. வரப்புகளில் எல்லாம் முத்துகள். நீர் ததும்பும் மடைகளில் எல்லாம் சங்குகள். பெருநீர் தேங்கி நிற்கும் வாய்க்கால் கரைகளில் எல்லாம் பொன்னிறச் சங்குகள். எருமைகள் விழுந்து புரளும் குழிகளில் எல்லாம் செங்கழுநீர்ப் பூக்கள். பரம்புகளுள் எல்லாம் பவளநிறம். நெல்வயல் பரப்பெல்லாம் அன்னப்பறவைகள். அருகில் பயிரிடப்படாத நிலங்களில் எல்லாம் சிவந்த தேன்கூடுகள். அழகான சோலைகளில் எல்லாம் தேனுண்டு களிக்கும் வண்டுகளின் கூட்டம்.

ஆற்றுநீர் பாய்வதால் எழும் ஓசையும் உழவர்கள் ஆலையாடுவதால் ஏற்படும் ஓசையும் கரும்பாலைகளில் கருப்பஞ்சாறு பாய்வதால் எழுகின்ற ஓசையும் நீர்க்கரைகளிலுள்ள



DRAFT

சங்குகளிடமிருந்து பெருகும் ஓசையும் எருதுகள் தம்முள் மோதிப் பாயும் போது எழும் ஓசையும் வெவ்வேறாக ஒலிப்பினும் தமக்குள் ஒன்றோடொன்று கலந்து மருதநிலத்தில் ஒலிக்கும்.

சங்குகள் தண்ணீரில் உறங்கிக் கொண்டிருக்கும் எருமைகள் மரநிழலில் உறங்கிக் கொண்டிருக்கும். வண்டுகள் மலர் மாலைகளிலே உறங்கிக் கொண்டிருக்கும். திருமகள் தாமரை மலரிலே உறங்குவாள். ஆமைகள் சேற்றிலே உறங்கும். முத்துச் சிப்பிகள் நீர்த்துறைகளிலே உறங்கும். அன்னங்கள் நெற்போரிலே உறங்கிக் கொண்டிருக்கும். மயில்கள் சோலைகளிலே உறங்கிக் கொண்டிருக்கும்.

கரும்பாலைகளிலிருந்து பெருகும் தேன் போன்ற கருப்பஞ்சாறும் கள் இறக்குவோர் அரிந்த பாளையிலிருந்து வடியும் கள்ளும் சோலைகளில் பழுத்த பழங்களின் சாறும் தொடுக்கப்பட்ட இடத்தினின்று வழிகின்ற தேனடைத் தேனும், எல்லை மீறிப் பெருகி ஓடி, கப்பல்கள் இயங்கும் கடலிலே போய் சேரக் கடலிலுள்ள மீன்கள் அவற்றைப் பருகிக் களிக்கும்.

குற்றாலக் குறவஞ்சி செய்யுளின் பொருள் முழக்கமிடும் அலைகளையுடைய நீர்வீழ்ச்சியானது தானும் கழங்காடுவதுபோல முத்துகளைச் சொரிந்து கொண்டிருக்கும். கானவர் மனைகளின் முற்றங்களிலெல்லாம் பரவிப் பெண்களின் சிற்றில்களையும் அருவி நீரானது அடித்துக் கொண்டு ஓடிக்கொண்டிருக்கும். மலைச்சாரல்களிலே கிழங்குகளைக் கிள்ளி எடுத்தும் தேன் இறால்களை ஒடித்துக்கொணர்ந்து, பூண்கட்டி, அதானாலே வறுத்த தினையினை உரலிலேயிட்டு இடிப்போம். குரங்குகள் இனிய மாமரத்தின் வளமான பழங்களைப் பறித்துப் பறித்துப் பந்தாடுவது போல எறிந்து கொண்டிருக்கும். தேன் பெருகியிருக்கும் செண்பக மலர்களின் வாசமோ வானுலகிலும் சென்று பரவும். அருளோடு அடியவர்களுக்கு வழங்கும் கொடைத் தன்மையினையுடைய மகராசர் திருக்குற்றாலநாதர். குறும்பலாவினடியிலே கோவில் கொண்டிருக்கும் ஈசராகிய அக்குற்றால நாதருடைய வளம் பெருகிக் கொண்டிருக்கும் திரிகூட மலையே எங்கள் மலையாகும்.

ஆடும் நாகப்பாம்புகள் கக்கும் நாகரத்தினங்கள் கோடிகோடியாகக் கிடந்து ஒலிபரப்பிக் கொண்டிருக்கும் வெண்ணிலவைத் தாம் உண்ணும் வெண்சோற்றுக் கவளமென நினைத்து, யானைகள் அதனை வழிமறித்து நிற்கும். வேட்டுவர்கள் தினைப்புனங்கள் தோறும் காடழித்து நெருப்பிடலால், வியப்பான அகில், குங்குமம், சந்தனம் முதலியவற்றின் நறுமணம் கமழ்ந்து கொண்டிருக்கும். காகமும் அணுகாத உயர்ந்த மலையுச்சிகளிலே, மேகக் கூட்டங்கள் வந்து படிந்து கொண்டிருக்கும். நெடிய குறும்பலாவினடியிலே இருக்கும் ஈசர், கயிலாச மலையினைத் தமக்கு வசமாகக் கொண்டவர். அவர் நிலையாகத் தங்கியிருக்கும் திரிகூட மலைதான் எங்கள் மலையாகும்.

கயிலைமலை என்று போற்றப்படுகின்ற வடதிசையிலுள்ள மலைக்கு ஒப்பாகத் தென்திசையிலே விளங்கும் மலை இந்தத் திரிகூடமலையேயாகும். பொன்னிறமான மேரு மலை போலும் என்று கூறும்படியாக உயர்ந்து நிற்கும் மலை இந்த மலையாயேயாகும். சிவ சயிலமலை என்று கூறப்படும் தென்திசையிலேயுள்ள மலைக்கு வடதிசையிலே இருக்கும் மலை இந்த மலையேயாகும். சகல மலைகளும் கொண்டிருக்கும் சிறப்புகள் எல்லாவற்றையும் தனக்குள்ளே அடக்கிக் கொண்டிருக்கும் மலையும் இந்த மலையாகும். வயிரக் கற்களும் மாணிக்கங்களும் விளைகின்ற மலையும் இந்த மலையேயாகும். வானத்துக் கதிரவன் மலைக் குகைகள் தோறும் நுழைந்து நுழைந்து ஒளிபரப்பும் மலையும் இந்த மலையேயாகும். திருப்பாற்கடலிலே பாம்பின் மேல் துயில் கொண்டிருப்பவரான திருமாலும் கண்விழித்துக் கொண்டவராகி, அகிலமெல்லாம் தேடித் திரிகின்ற மேன்மையாளராகிய திருக்குற்றாலநாதரின் இந்த திரிகூடமலையே எங்கள் மலையாகும்.

கொல்லிமலை என்பது எனக்கு இளையவளாகப் பிறந்த என் தங்கையான செல்லி என்பவள் இருக்கும் மலையாகும். என் கொழுநனுக்குக் காணியாட்சியான மலை பழநிமலையாகும். கதிரவன் படிந்து செல்லும் விந்தியமலை என் தந்தைக்குரிய மலையாகும். இமயமலை என்னுடைய தலைவனுக்குரிய மலையாகும். சொல்வதற்கு அருமையுடையதான சுவாமிமலை என்னுடைய மாமியின் மலையாகும். என் தோழியின் மலை நாஞ்சில் நாட்டிலுள்ள வேள்வி மலையாகும். மேகக் கூட்டங்கள் முழவுகளைப் போல இடி முழக்கினைச் செய்ய அதற்கிணங்க மயிலினங்கள் ஆடிக் கொண்டிருக்கும் திரிகூட மலையே எங்கள் மலையாகும்.

**மலைகள்**

| கேரளம் | தமிழ்நாடு |
|---|---|
| • ஆனைமுடி | • தொட்டபெட்டா மலை |
| • தேவிமலை | • வெள்ளியங்கிரிமலை |
| • பாம்பாடும்சோலை | • மேகமலை |
| • வெள்ளரிமலை | • பர்வதமலை |
| • கரிமலை | • சுவாமிமலை |
| • அகஸ்திய மலை | • பழநிமலை |
| • சபரிமலை | • நீலகிரிமலை |
| • பூமலை | • கொல்லிமலை |
| • பொன்முடி | • மீசைப்புலிமலை |
| • கொடமலை | • ஏலகிரிமலை |

## கட்டுரை



DRAFT

## உரையாடல் மாதிரி

பெரியப்பா : டேய் ஆறுமுகம், சம்முவம் (சண்முகம்) இங்கே வாடா.... அதோ களத்து மேட்டுல இருக்கிற வேப்பந்தழை, நுணாத்தழை, வாதமடக்கி, பூவரசு, புங்கத்தழை எல்லாத்தையும் வாரி கீழண்டை இருக்கிற சேத்துக் கழனியில் போட்டு தொளி மிதிக்க ஆள் வருவாங்க.ரெண்டு பேரும் கிட்டக்க இருந்து பார்க்கணும் என்ன...

(வேலையாட்கள் வந்து இலைத்தழைகளைக் கொட்டிவிட்டுச் சென்றனர்)

ஆறுமுகம் : தொளி மிதிக்க இன்னும் ஆள் வந்தபாடில்லை. இப்போ என்னடா பண்றது? நாமே மிதிக்கலாம் வா என்றான்.

சண்முகம் : சரி மிதிக்கலாம் வா...... நல்லா மிதிடா... அப்படித்தான் ...... அப்படித்தான் .... ஓஸ்கி மிதி .....

ஆறுமுகம் : டேய் அவனை இன்னும் நல்லா மிதிடா .... தலை தெரியறது பார் .... அமுக்கு ... அமுக்கு .....

(ஊரிலே நடமாடிக் கொண்டிருக்கும் பொறுக்கிகளும் போக்கிரிகளும் குடிகாரர்களுமே இலைகளை நினைத்து மிதித்தால் அன்று நாள் முழுக்க கால்கள் விண்விண் என்று வலித்தது)

பெரியப்பா : இன்னிக்கி இல்லாட்டி நாளைக்கு வந்து மிதிச்சுட்டுப் போறாங்க.... உங்களுக்கேண்டா இந்த வேண்டாத வேலை?

(பெரியப்பா இருவர் கால்களையும் பிடித்து விடுகிறார்)

இதுபோன்று மாணவர்களுக்குப் பிடித்தப் பகுதியை எழுதச் செய்தல்.

## 'மழைச்சாரல் தாலாட்டும் குளுகுளு குற்றாலம்'

வாழ்க்கைப் பயணத்தில் அவ்வப்போது சுற்றுப்பயணங்கள் அவசியமாகும். அவை நமக்கு புத்துணர்வை அளிக்கும். இது அவசர உலகமாகும். கல்வி, வேலைவாய்ப்பு, தொழில், பணம் என்று மனிதர்கள் ஓடிக்கொண்டே இருக்கிறார்கள். களைப்பும் சலிப்பும் ஏற்பட்டாலும் அவரச உலகில் ஓடவில்லையெனில் நசுக்கப்பட்டவராவர். நம்மை நாமே புதுப்பித்துப் புத்துணர்வை ஏற்படுத்திக் கொள்வதற்குச் சுற்றுலா முக்கியமான ஒன்றாகும்.

### குளுகுளு குற்றாலம்

குற்றாலம் இயற்கை எழில் கொஞ்சும் அற்புதமான சுற்றுலாத்தலங்களாகும். சாமானியர்களின் சிம்லா, சிந்தை மயக்கும் சாரல் பூமி என்றெல்லாம் அனைவராலும்

DRAFT

அழைக்கப்படும் இடம்தான் குற்றலாம். தமிழ்நாட்டிலுள்ள தென்காசி மாவட்டத்தில் அழகும், வளமும் ததும்பி செழித்தோங்கி இருக்கும் இயற்கையின் கொடை எனலாம். மாழைச்சாரலில் குளிர்விக்கும் குளுகுளு இடமே குற்றாலமாகும்.

கேரளத்தில் ஜூன் முதல் செப்டம்பர் மாதம் வரை தென்மேற்குப் பருமழைக் காலமாகும், அப்போது குற்றாலத்தில் மிதமான பருவகாலச் சூழ்நிலை நிலவும். மேற்குத் தொடர்ச்சி மலையில் மழை பெய்யும்போது அருவிகளில் நீர்வரத்து அதிகமாகி ஆரவாரமாய்ப் பாய்ந்துவரும். அருவிகளின் ஆரவாரம் நம்மை வியப்பில் ஆழ்த்தி பரவசப்படுத்தும்.

## குற்றாலம் – பெயர்க்காரணம்

'தென்னகத்தின் ஸ்பா', 'ஏழைகளின் ஊட்டி' என்றெல்லாம் அழைக்கப்படுவதுண்டு. முற்காலத்தில் இந்தப் பகுதி முழுவதும் குறுகிய ஆலமரம் நிறைந்து காணப்பட்டதால் குறுகிய + ஆலம் என்பதே குற்றாலம் என ஆனது என்று கருதப்படுகிறது. பாண்டியர்களின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதியாக இருந்து வந்துள்ளது. பாண்டியர்கால கட்டடங்களையும் கோவில்களையும் இப்பகுதியில் காணலாம்.

## குற்றால மலைவளம்

குற்றால மலைவளம் பல தமிழ் இலக்கியங்களில் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. இந்த மலையின் பெயரில் எழுதப்பட்ட இலக்கியம் 'குற்றால குறவஞ்சி'. இதன் ஆசிரியரான திரிகூட இராசப்பக் கவிராயர் குற்றாலத்தின் சிறப்புகளையும் வளங்களையும் சுவையூட்டும் விதமாக இயற்றியுள்ளார்.

சங்ககாலத்தில் 'தேனூர்' என்ற பெயரில் அழைக்கப்பட்டது. சங்கப்பாடல்களில் இவ்வூர் பெண்களின் அழகுக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. ஆர்ப்பரிக்கும் அருவிகள், இயற்கையின் அற்புதங்கள், நவகிரகம்போலொன்பது அருவிகளும் உள்ளன.

## ஒன்பது அருவிகள்

பேரருவி, ஐந்தருவி, சிற்றருவி, பாலருவி, புலியருவி, பழத்தோட்ட அருவி, தேனருவி, செண்பகாதேவி அருவி, பழைய குற்றால அருவி என ஒன்பது வகையான அருவிகள் உள்ளன. அருவிகள் மலைகளிலுள்ள மூலிகைகளைத் தழுவி வருவதால் அருவி நீரில் மருத்துவக் குணங்கள் நிறைந்துள்ளதாகக் கருதப்படுகிறது. எனவே தான் பல நோய்களுக்கு அருமருந்தாகக் குற்றால அருவிக் குளியலைக் கருதுகிறார்கள்.

## ஆன்மீகச் சுற்றுலாத்தலம்

அற்புதமான அருவிகளின் தலமாக மட்டுமின்றி ஆன்மீகச் சுற்றுலாத் தலமாகவும் குற்றாலம் விளங்குகிறது. குற்றாலநாதர் கோயில் சைவசமயத்தின் திருநடம் புரிந்த பஞ்சசபைகளில் ஒன்றான சித்திரசபையும் இங்குள்ளது. சைவசமயப் புலவர்கள்



DRAFT

குற்றாலத் தலம் மீது பல தேவாரப் பாடல்களைப் பாடி இருக்கின்றனர்.

சுற்றுலாத் தலமாகவும் வழிபாட்டுத் தலமாகவும் விளங்கும் குற்றால மலை அனைவரும் பார்க்க வேண்டி இடமாகும். உடலையும் உள்ளத்தையும் ஒருங்கே உற்சாகப்படுத்தும் ஓர் அரிய தலம் என்பது பெருமைக்குரியது.

**தலையங்கம்**

## டைம்ஸ் ஆஃப் இந்தியா

## 2024 ஜூலை 25

## நீர்மாசுபாடு : இன்னும் ஒரு கடுமையான தேசிய சவால்

இந்தியாவில் பரவலாக நீர்மாசுபாடு ஒரு சவாலாக உள்ளது. நாட்டில் ஏறத்தாழ 1,95, 813 குடியிருப்புகளில் மோசமான நீர்த்தரம் இருப்பதாகவும், இது மக்களுக்குக் கடுமையான சுகாதார அபாயங்களை ஏற்படுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் நீர் மாசுபாட்டிற்குத் தொழில்துறையும் விவசாயத்தில் இராசாயணப் பயன்பாடும் காரணமாக இருக்கின்றன. தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் நிலத்தடி நீரினை மாசடையச் செய்கிறது. நதிகளிலும் அதன் துணை நதிகளிலும் மாசுபாடுகள் அதிகரித்துள்ளன. இன்னும் கவலைக்குரிய செய்தி என்னவென்றால் நதிப்படுகை நெகிழிப் பொருள்கள் கொட்டப்படும் இடமாக மாறிவருவதாகும்.

விவசாயத்தில் பூச்சிக்கொல்லிகள், உரங்கள் மற்றும் பிற வேளாண் வேதிப்பொருள்களின் பயன்பாடு மாசுபட்ட நீர் ஆதாரங்களுக்கு வழிவகுக்கின்றன. நகர்ப்புறங்களில் உள்ள கழிவுகளை முறையற்ற வகையில் அகற்றுவது நிலத்தடிநீர் மாசுபடுவதற்கும் நோய்கள் பரவுவதற்கும் அடிப்படைக் காரணியாக இருக்கின்றது. அதனோடு நகர்ப்புற வீட்டுக் கழிவுகளும் தொழிற்சாலைக் கழிவுகளும் நீர்நிலைகளில் நேரடியாகக் கலக்கின்றன. இதன் விளைவாக நீர் ஆதாரங்கள் மிகுந்த மாசுக்கு உட்பட்டு நீர்நிலைகள் காலப்போக்கில் குப்பைக் கூடங்களாக மாறுகின்றன.

மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் கூற்றுப்படி நகர்ப்புற கழிநீர் 61% ஆறுகள் மற்றும் பிற நீர்நிலைகளில் கலக்கின்றன. டெல்லியில் உள்ள யமுனை நதி கணிசமான மாசுபாட்டை வீட்டுக்கழிவு, தொழிற்சாலை கழிவுகளிலிருந்து பெறுகிறது. 2014 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட 'நமாமிகங்கே' எனும் திட்டம் கங்கை நதி பாதுகாப்பிற்காகச் செயல்பட்டு வருகிறது.

கங்கை நதிப்படுகையில் மாசுபாடு, நீர்மேலாண்மை மற்றும் நதிப் பாதுகாப்பு ஆகியவற்றின் சிக்கலான பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான தொடர்ச்சியான முயற்சிகளுடன் வெற்றிகளையும் சவால்களையும் இத்திட்டம் கண்டுள்ளது.

DRAFT

கடுமையான விதிமுறைகள், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் மற்றும் சமூக அடிப்படையிலான முயற்சிகள் மூலம் நீர் மாசுப்பாட்டை குறைக்க இந்திய அரசு, தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் சமூக அமைப்புகள் முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றன. இருப்பினும் நீர் மாசுபாட்டை போர்க்கால அடிப்படையில் கையாள்வது நமக்கு மிகவும் முக்கியமாகும். இந்தியாவில் ஒவ்வொரு குடிமகனும் தனிப்பட்ட வகையில் நீர் மாசுபாட்டை தடுக்க உறுதிபூண்டால் மட்டுமே அனைவருக்கும் சுத்தமான தண்ணீர் கிடைப்பது சாத்தியமாகும். இல்லையெனில் ஒவ்வொருவருக்கும் சுகாதாரமான குடிநீரைக் கொடுப்பது என்பது அரசிற்கு சவாலாகத்தான் இருக்கும். எனவே, சரியான நீர் மேலாண்மையைக் கடைப்பிடித்து ஆரோக்கிய வாழ்வை உறுதிசெய்வது நமது ஒவ்வொருவரின் கடமையாகும்.

DRAFT

## மாதிரி அலகுத் திட்டம்

வகுப்பு : 10

அலகு :

துணை அலகுகள் :

### கற்றல் இலக்குகள்

- .
- .
- .
- 
- .
- .

### துணைக் கருவிகள்

- 
- 
- 
- 
- 
- 
- 

### மனப்பான்மை

- .
- .
- .

### செயல்பாடுகள்

- .
- .
- .

DRAFT

## மொழிக் கூறுகள்

- அடுக்குத் தொடர்
- இரட்டைக் கிளவி
- தூயத் தமிழ்நடை
- வாக்கிய அமைப்பு

## மதிப்பீடு

- சுய மதிப்பீடு
- குழு மதிப்பீடு
- மதிப்பீட்டுக் குறிப்புகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்தல்.

DRAFT

## அன்றாடத் திட்டம் (மாதிரி)

| | | |
|---|---|---|
| வகுப்பு | : | 10 |
| பாடம் | : | தமிழ் (AT) |
| அலகு | : | விந்தைகள் |
| துணை அலகுகள் | : | நொய்யல் |
| பாடப்பகுதி | : | கிராம வளமே நீரின் வளமை |
| நேரம் | : | 40 நிமிடங்கள் |
| கற்றல் இலக்கு | : | நீர்நிலைகளைப் பாதுகாக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி பல்வேறு செயல்பாடுகளில் ஈடுபடுகிறார்கள். |
| துணைக் கருவிகள் | : | • பாடநூல்<br>• கரும்பலகை<br>• ஆசிரியர் கையேடு<br>• காணொளிக் காட்சி |

| கற்றல் செயல்பாடுகள் | பிரதிபலிப்பு |
|---|---|
| **நுழைவுச் செயல்பாடு**<br>• மனிதனின் அடிப்படை தேவைகள் எவை?<br>• உணவு தயாரித்தல் இன்றியமையாதது எது?<br>• நம் அன்றாட வாழ்வில் நீரின் பங்கு என்ன?<br>• நீரின் உறைவிடங்கள் எவை? போன்ற வினாக்களை கேட்டு பதிலளித்த மாணவர்களை பாராட்டி பாடப்பகுதிக்குள் நுழைதல்.<br>**செயல்பாடு 1**<br>• மாணவர்களை குழுக்களாகப் பிரித்து (மாணவர்களின் எண்ணிக்கையினஅ அடிப்படையில் ஆசிரியரின் வசதிக் கேற்ப பரிக்கலாம்.)<br>• "கிராம வளமே நீரின் வளமை" என்ற பாடப்பகுதியில் அமைந்துள்ள நீரின் உறைவிடங்கள். | |

DRAFT

| | |
|---|---|
| • நாகரிகங்களில் நீர்நிலையின் பங்கு.<br>• நீரின்றி அமையாது உலகெனின் என்பதைப் போன்று நீருடன் தொடர்புடைய வரிகளை கண்டறிதல்.<br>• நீர் நிலைகள் அழிவதற்கான காரணம்.<br>• நீர் நிலைகள் பாதுகாப்பிற்கு கையாள வேண்டிய வழி முறைகள் ஆகியவறறின் அடிப்படையில் கலந்துரையாடச் செய்து குறிப்பு தயாரிக்கச் செய்தல். சிறந்த கருத்துகளை ஆசிரியர் கரும்பலகயில் எழுதுதல்.<br>• பூமியின் நிலப்பரப்பைவிட நீர்பரப்பு அதிகமானதால் நீரின் முக்கியத்துவத்தை அன்று உணராமல் போனதே இன்றைய தவிப்புக்குக் காரணம்.<br>• விளை நிலங்களை வீணாக்குவதை தவிர்த்தல்.<br>• சாலை ஓரங்களை நீரோடைகளாகவும் வாய்க்கால்களாகவும் மாற்றுதல்.<br>**செயல்பாடு 2**<br>மாணவர்களை நீர் உறைவடங்களின் பெயரின் அடிப்படையில் குழுவாக பிரித்து நீர்நிலைகளின் அதிகரிப்பு நாட்டு வளத்திற்குத் தேவை எனும் கருத்தின் அடிப்படையில் துண்டுபிரசுரம் தயாரிக்கச் செய்தல்.<br>**வழிமுறைகள்**<br>• வடிவம்<br>• கருத்து<br>• சுருங்கச் சொல்லுதல்<br>• விழிப்புணர்வுச் செய்தி | |

DRAFT

## துண்டுப்பிரசுரம்

'நீரின்றி அமையாது உலகு'

அன்புடையீர்,

நாம் வாழும் வாழ்க்கை இப்பூமியின் தானம்தான் நிலம், நீர் போன்றவை வாழ்வின் ஆதாரங்கள். நீர்வளம் நாட்டின் உயிர்வளம். நாம் இன்று நீர்வளம் குறையும் செயல்களை அதிகமாகச் செய்துவருகிறோம். ஆறு, குளம், குட்டை, கிணறு, ஏரி, அணைகள் இவற்றைத் தூய்மையாகப் பாதுகாத்தல் ஆவசிம். நாகரீக, வளர்ச்சி, நம்மைச்சுற்றி உள்ள வளங்களின் வளர்ச்சியை மண்ணிற்குள் புதைத்து வருகிறது. இந்நிலை உயிர்களின் அழிவிற்குக் காரணமாகும்.

'நீரின்றி அமையாது உலகு' என்பது போல ஒரு நாட்டின் வளத்திற்கு நீர்நிலைகளின் அதிகரிப்பு மிகவும் அவசியமானதன்றோ? மழைநீரைச் சேமிப்போம்! வறட்சியைத் தடுத்து நிறுத்துவோம்! வளமான வாழ்வைப் பெறுவோம்!

இடம்: மூணார் இவண்
தேதி : 18/03/2025 பசுமை மன்றம்

என்ற துண்டுப்பிரசுரத்தின் மாதிரியை காணொளி மூலம் காண்பித்து மாணவர்கள் எழுதிய துண்டுப்பிரசுரத்தை சரி பார்க்கச் செய்தல்.

## மாணவர்களுக்கான செயல்பாடு

- தண்ணீரை நம் வாழ்வில் எதற்கெல்லாம் பயன்படுத்துகின்றோம்.
- ஒருவாரம் முழுவதும் தண்ணீரே குழாயில் வரவில்லை என்றால் நம் நிலை என்னவாகும். போன வினாக்களைக் கேட்டு மாணவர்களை பதிலளிக்கசெ செய்தல்.

DRAFT

## தொடர் செயல்பாடு

- கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்குப் பொருள் கண்டறிந்து அகரவரிசைப்படுத்தி வருக.

  ஊருணி, ஊனம், மானும், குட்டை, கண்மாய்

- மலையிலிருந்து நீர்விழுவது போன்ற காட்சியை வரைந்து வருக.

  (பின்தங்கிய மாணவர்களுக்கான செயல்பாடு)

DRAFT

## வினாத்தாள் மாதிரி

## தமிழ் முதல் தாள் (AT)

நேரம் : $1^1/_2$ மணி　　　　　　　　　　　　　　　　　　　　　மதிப்பெண்:40

**சரியான விடையை தேரந்தெடுத்து எழுதுங்கள்**　　　　　　　　　　　(2×1=2)

1. சொல்லின் செல்வர் என அழைக்கப்படுபவர் யார்?

   (அ) ஈ.வே.ரா　　　　(ஆ) சி.சு. செல்லப்பா

   (இ) ஜி. சங்கர்　　　　(ஈ) பாரதிதாசன்

2. "முழுங்கதிரை புனலருவி கழங்கென முத்தாடும்" என்ற பாடல் வரி இடம் பெறும் நால் எது?

   (அ) கம்பராமயணம்　　　　(ஆ) குற்றலாக் குறவஞ்சி

   (இ) ஆதியுலா　　　　(ஈ) திருக்குறள்

**3 முதல் 5 வரையுள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்**　　　　　　　　　　　(3×2=6)

3. ஏற்றபடி இணைத்து எழுதுக.

   (அ) உண்ணாமலை – கம்பர்

   (ஆ) ஆசிர் வாதம் – சுப்ரபாரதிமணியன்

   (இ) கம்பராமயணம் – கலவை சண்முகம்

   (ஈ) சாயத்திரை – ஜி. சங்கர்

4. பின்வரும் சொற்களில் வினைத்தொகை மற்றும் பண்புத்தொகை சொற்களை தேர்ந்தெடுத்து எழுதுக.

   தங்கக்குடம், மரத்தை வெட்டினான், ஊறுகாய், நண்பனின் வீடு, வட்டப்பலகை, வெடிக்குண்டு

5. நீர் நிலைகள் மாசடைந்து வருவதற்கான காரணங்கள் இரண்டினை எழுதுக.

**6 முதல் 11 வரையுள்ள வினாக்களில் எவையேனும் ஐந்தனுக்கு விடையளிக்க**　　　　　　　　　　　(5×3=15)

6. பின்வரும் சொற்களை அகரவரிசைப் படுத்தி பொருள் தருக.

   கேணி, அயல், எழினி, மஞ்ஞை, செகம, துயில்

DRAFT

7. கிராம முன்னேற்றமே ஒரு நாட்டின் முன்னேற்றம் எனும் பொருண்மையில் பள்ளியில் கட்டுரைப்போட்டி நடைபெறவுள்ளது இந்நிகழ்வுக்கான சுற்றிக்கை தயார் செய்க.

8. "உழைப்பாளி தொழிலாளி பட்டாளி" என்னும் கட்டுரை நூல் அறிஞர் அண்ணா அவர்களால் எழுதப்பட்டது. இந்நூல் மனிவாசகர் பதிப்பகத்தால் 1999–ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. விலை 20 ரூபாய் ஆகும் இதற்கான நூலடைவு தயார் செய்க.

9. மழை நீரை சேகரிப்பதற்கு பள்ளி வளாகத்தில் எந்தெந்த வழிமுறைகளை கையாளலாம்? உங்கள் கருத்துகளை எழுதுக.

10. உலக வனதினத்தன்று பள்ளி காலைக் கூட்டத்தில் கூறுவதற்கு உறுதிமொழி தயாரியுங்கள்.

11. நிகழ்ச்சி நிரல்

சுற்றுச்சூழல் தின விழா

நாள் : 05.06.2025

| | | |
|---|---|---|
| நேரம் | : | காலை 10 மணி |
| வரவேற்புரை | : | தமிழாசிரியர் |
| தலைமையுரை | : | தலைமை ஆசிரியர் |
| சிறப்புரை | : | மயிலம்மா |
| வாழ்த்துரை | : | பெற்றோர் ஆசிரிய சங்கத் தலைவர் |
| நிகழ்ச்சி | : | மரக்கன்றுகள் நடல் |
| நன்றியுரை | : | மாணவ தலைவர் |

இந்நிகழ்ச்சியை பத்திரிக்கை செய்தியாக எழுதுங்கள்.

**12 முதல் 15 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு விடையளிக்கவும்.** (3×4=12)

12. ஏற்காடு என்ற மலையின் அழகினை விளக்கி குறிப்பு எழுதுங்கள்.

13. தொழிற்சாலை கழிவுகள் நீர்நிலையில் வந்து கலப்பதால் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படுகிறது. இதை தடுக்க கோரி மாவட்ட ஆட்சியாளருக்கு ஒரு புகார் கடிதம் எழுதுங்கள்.

DRAFT

14. எழில் மிகு ஏற்பாடு மற்றும் குற்றலா குறவஞ்சி பாடப்பகுதியில் வரும் மலைகளை ஒப்புமை படுத்தி ஒப்பீட்டுக் குறிப்பு எழுதுக.

15. இயற்கையை பாதுகாப்போம் என்னும் தலைப்பில் பள்ளி பசுமை மன்ற கூட்டத்தில் வரையாற்ற சொற்பொழிவுரை தயார் செய்யுங்கள்.

**16, 17 ஆகிய வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்கவும்.**

(1×5=5)

16. மலைகள் அழிக்கப்படுவதால் மக்களும் பிற உயிரனங்களும் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகின்ற இதனை தவிர்க்கும் வழிமுறைகளை சுட்டிக்காட்டி தலையங்கம் தயார் செய்யுங்கள்.

17. "நிலம்" சிறுகதையின் மையக்கருத்து, பாத்திரப்படைப்பு, மொழிநடை போன்றவற்றை விமர்சனம் செய்து எழுதுங்கள்.

DRAFT

# 2 ஒன்றெனக் கொள்

**அலகு அறிமுகம்**

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

– திருவள்ளுவர்

என 2000 ஆண்டுகளுக்கு முன்பே சமத்துவ சமுதாயம் படைக்க விரும்பினார் திருவள்ளுவர். அனைத்து தரப்பு மக்களுக்கும் சம வாய்ப்பு கிடைக்கும் சமத்துவ சமுதாயம் மலர வேண்டும் என்பது மகாத்மா காந்தி, லுதர்கிங் ஆகியோரின் கனவு. கூட்டு குடும்பம் என்பது ஒரு அழகான சமூக அமைப்பு அனைவரும் ஒன்றாக வாழ்ந்து துன்பத்திலும் இன்பத்திலும் ஒருவருக்கொருவர் ஆதரவளிக்கின்றனர். கூட்டு குடும்பத்தில் பொருளாதார ரீதியான பல நன்மைகள் உள்ளன. கூட்டுக் குடும்பங்களில் வளரும் குழந்தைகளும் நல்லொழுக்கம் நிறைந்திருக்கும். பரந்த மனப்பான்மை வளர்கிறது. ஆனால் இன்றைய சமூகம் தனிமையில் வாழ்வதை விரும்புவதால் பிறரிடம் அன்பு காட்டுதலையும் பிறருக்கு உதவி வாழ வேண்டும். மதித்து வாழ வேண்டும் என்ற எண்ணம் இல்லாமல் போகிறது. இன்றைய சமூக சமத்துவம் என்பதை மறந்து வாழ்கிறது.

முதுமையில் இனிமை எனும் துணைக் கருத்தலகில் கீழ் சுமை அல்ல மூப்பு, குடும்பவாழ்வில் ரயில் பயணத்தில் போன்ற பாடப்பகுதிகள் இடம்பெற்றுள்ளன. இரண்டாம் கருத்தலகான சமபந்தி உணவு, புதிய சமூதாயம் முத்து எங்கள் சொத்து எனும் பாடப்பகுதிகள் ஒற்றுமையை விலியுறுத்திச் செல்கின்றன. இனியொரு விதி செய்வோம் எனும் கருத்தலகின் கீழ் பாரத சமூதாயம், நாட்டுப்பாடல் காட்டும் பொருளியல் ஆமைச் சமூகமும் உமை முயல்களும் எனும் பாடப்பகுதிகல் இடம்பெற்றுள்ளன.

இந்த அலகைக் கற்பிக்கத் தேவையான காலம்
24 பிரிவேளைகள்

DRAFT

DRAFT

| கரு | துணைக் கரு | இலக்கிய வடிவங்கள் | கற்றல் இலக்குகள் | | | மொழிக் கூறுகள் | மொழி வெளியீட்டு வடிவங்கள் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | கருத்துகள் | திறன்கள் | மனப் பான்மைகள் | | | |
| சமூகமயமாக்கல் (ஒன்றெனக் கொள்) | முதியோர் பாதுகாப்பு (முதுமையில் இனிமை) | • அனுபவக் கட்டுரை<br>• வசனக் கவிதை<br>• சிறுகதை | • முதியவர்கள் ஒரு சமூகத்தின் முதில் கனிகள் ஆவர்.<br>• சமூக உறவுகள் மேம்பட்டால் நாடு ஒற்றுமையாக விளங்கும். | • ஒரு பொருள்/ கருத்து/ படைப்பு போன்றவற்றை மதிப்பீடு செய்து விமர்சனம் எழுதுதல்.<br>• கருத்திற்கேற்ற வகையில் சொல்லாட்சிகளைப் பயன்படுத்தி கற்பனை மற்றும் உணர்வுப்பூர்வமாகக் கவிதை எழுதுதல்.<br>• கருத்து அல்லது பொருளுக்கேற்ப கருத்துகளைத் திரட்டி பகுப்பாய்வுச் செய்து ஒழுங்குப்படுத்தி கட்டுரை எழுதுதல்.<br>• தங்களுக்குத் தேவையான கருத்துகளைப் பெறுவதற்குக் கேள்விகளைக் கேட்டு பதில்களைப் பெறும் வகையில் வினா நிரல் தயாரித்தல்.<br>• ஒரு பொருளை/ நிகழ்வை அறிவிக்கும் வகையில் சிறப்பான சொல்லாட்சிகளைப் பயன்படுத்தி விளம்பரம் தயாரித்தல்.<br>• தங்களுக்கு ஏற்பட்ட அனுபங்களைத் தெளிவுடன் நல்ல மொழிநடையில் அனுபவக் குறிப்பு எழுதுதல்.<br>• கவிதையின் சொல் நயம், பொருள் நயம், அணி நயம் போன்றவற்றைக் கண்டறிந்து நயம் பாராட்டுதல்.<br>• இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கருத்துகளை/ பொருள்களை/ படைப்புகளை ஒப்பிட்டு அவற்றிலுள்ள ஒற்றுமை வேற்றுமைகளைப் பகுப்பாய்வுச் செய்து ஒப்பீட்டுக்குறிப்பு எழுதுதல். | • முதியோரை அரவணைத்துப் பேண வேண்டும்.<br>• ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற எண்ணத்தைப் பெற வேண்டும்.<br>• பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை பார்க்கக் கூடாது.<br>• முதலாளி, தொழிலாளி வேறுபாட்டினைத் தவிர்க்க வேண்டும். | • உவமைத் தொகை<br>• உம்மைத் தொகை<br>• சிலேடை அணி<br>• சொல் நயம்<br>• பொருள் நயம் | • விமர்சனம்<br>• கவிதை<br>• கட்டுரை<br>• வினா நிரல்<br>• விளம்பரம்<br>• அனுபவக் குறிப்பு<br>• நயம் பாராட்டுதல்<br>• ஒப்பீட்டுக் குறிப்பு | • மதிப்பீட்டுக் குறிப்புகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்தல்<br>• சுயமதிப்பீடு ஆசிரியர் மதிப்பீடு<br>• குழு மதிப்பீடு |
| | சமத்துவம் (ஒன்றே உலகம்) | • வாழ்க்கை வரலாறு<br>• வசனக் கவிதை<br>• சிறுகதை | • நாட்டிலுள்ள அனைவரும் சரிநிகர் சமம் ஆவர்.<br>• பொருளாதார ஏற்றத்தாழ்வு களை நீக்க வேண்டும். | | | | | |
| | ஒற்றுமை (இனியொரு விதி செய்வோம்) | • கவிதை<br>• கட்டுரை<br>• சிறுகதை | • அனைவருக்கும் சம வாய்ப்புகளும் வளங்களும் கிடைக்க வேண்டும். | | | | | |

## கற்றல் இலக்குகள்

- முதியவர்கள் சுமையல்ல சுகமாணவர்கள் என்பதை உணர்ந்து பல்வேறு படைப்புகளை விமர்சனம் செய்து எழுதுகிறார்கள்.
- முதியோர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் கண்டறிந்து தீர்வு காணும் வகையில் கலந்துரையாடிக் குறிப்பு எழுதுகிறார்கள்.
- முதியோர் இல்லங்கள் பெருகி வருதலால் ஏற்படும் சமூகச் சிக்கல்களைக் கலந்துரையாடிப் பத்திரிக்கைக்குத் தலையங்கம் எழுதுகிறார்கள்.
- முதியோர்களுக்குச் சமூகத்தில் மதிப்பளிக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி பல்வேறு செயல்களில் ஈடுபடுகிறார்கள்.
- சமத்துவத்தின் இன்றியமையாமையை உணர்த்து பல்வேறு படைப்புகளில்/ செயல்களில் ஈடுபடுகிறார்கள்.
- நவீன உலகத்திலும் காணப்படும் சமூக பொருளாதார ஏற்றத் தாழ்வுகளுக்குத் தீர்வு காணும் வகையில் கட்டுரை/சொற்பொழிவு எழுதுகிறார்கள்.
- அன்றைய இன்றைய சமூகத்தை ஒப்பிட்டுக் குறிப்பு எழுதுகிறார்கள்.
- பாடலை நயம் பாராட்டி எழுதுகிறார்கள்.
- சமூகப் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைக் கலந்துரையாடி விமர்சனக் குறிப்பு எழுதுகிறார்கள்.

## கற்றல் துணைக் கருவிகள்

- பாடப்புத்தகம்
- ஆசிரியர் பனுவல்
- சமூகம் / குடும்பம் தொடர்பான படங்கள்
- செய்திகள் / குறும்படங்கள்
- வாழ்க்கைக் குறிப்பு (தந்தை பெரியார்)
- கட்டுரைகள் / கவிதைகள்
- இதழ்கள், புத்தகங்கள் / ஊடகச் செய்தி குறிப்புகள்

DRAFT

## நுழைவுச் செயல்பாடு

ஆசிரியர் த.தொ.நு (ஐசிடி) வழி குடும்ப ஒற்றுமை தொடர்பான குறும்படத்தை மாணவர்களுக்குக் காண்பித்தல். (ஆனந்தம், வானத்தைப்போல) ஆனந்தம் என்ற படத்தின் குடும்ப ஒற்றுமையை விளக்கும் சில காட்சிகளைக் கூறச் செய்தல்.

→ படத்தில் என்னென்ன பார்த்தீர்கள்.

→ நீங்கள் பார்த்த படத்தில் அண்ணனின் செயல்கள் பாராட்டுக்குரியதா?

→ இது போன்ற அனுபவம் உங்களுக்கு ஏற்பட்டுள்ளதா?

→ குடும்பத்தில் மற்றவர்களுக்காக விட்டுக் கொடுக்கும் பொழுது உங்களுக்கு ஏற்படும் மாற்றங்கள் என்ன?

இதுபோன்ற வினாக்கள் மூலம் ஆசிரியர் பாடத்திற்கு ஏற்ற கருத்துக்களைக் கூறச் செய்தல்.

குடும்ப ஒற்றுமை, சமூக ஒற்றுமை போன்ற பெயர்களைக் கூறுகின்றனர். இவற்றின் அடிப்படையில் ஆசிரியர் சொற்களை எடுத்துக்காட்டி விளக்குதல்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' – என்ற வரிகளைக் கூறி ஆசிரியர் கலந்துரையாடல் நடத்துதல். மாணவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்திப் பாடப் பகுதிக்குள் அழைத்துச் செல்லுதல்.

(ஆசிரியர்கள் தங்கள் திறன்களுக்கேற்ப நுழைவுச் செயல்பாட்டை அமைத்துக் கொள்ளலாம்.)

## பாடப்பகுதிகள்

**முதுமையின் இனிமை**

- சுமை அல்ல மூப்பு
- குடும்ப வாழ்வில்
- ரயில் பயணத்தில்

**ஒன்றே உலகம்**

- சமபந்தி உணவு
- புதிய சமுதாயம்
- முத்து எங்கள் சொத்து

**இனியொரு விதிசெய்வோம்**

- பாரத சமூதாயம்

DRAFT

- நாட்டு பாடல் காட்டும் பொருளியல்
- ஆமைச்சமூகமும் ஊமை முயல்களும்

## சுமை அல்ல மூப்பு

### செயல்பாடு 1

**பட்டிமன்றக் குறிப்பு தயார் செய்தல்.**

→ ஆசிரியர் ஐசிடி வழி ஒன்று இரண்டு பட்டிமன்ற நிகழ்ச்சிகளைக் காண்பித்தல்.

→ நடுவர், பேச்சாளர்களின் திறன்களைக் கவனிக்கும்படி கூறுதல்.

→ பட்டிமன்றத்தைப் பற்றிய பொதுவான கருத்துக்களைக் கலந்துரையாடி தெளிவு பெறுதல்.

→ மாதிரி பட்டிமன்றம் நடத்துதல்

→ பட்டிமன்றத்திற்குத் தேவையான தரவுகளைத் திரட்டுதல்.

→ நூலகம், காணொளி காட்சிகள், வகுப்பறை அனுபவங்கள் வாயிலாகக் கிடைக்கப் பெற்ற தகவல்களின் அடிப்படையில் பட்டிமன்றக் குறிப்பு எழுதச் செய்தல்.

→ ஆசிரியர் மதிப்பீடு செய்தல்.

→ அனைத்து மாணவர்களும் எழுதுகின்றனர் என்பதை ஆசிரியர் உறுதி செய்தல்.

→ மாணவர்களை வகுப்பறையில் பட்டிமன்றம் நடத்த தயார் செய்தல்.

→ மாணவர்களை நடுவராகவும் பேச்சாளர்களாகவும் பங்கேற்கச் செய்தல்.

→ ஆசிரியர் ஒருங்கிணைத்தல்.

→ அனைத்து மாணவர்களின் பங்களிப்பையும் ஆசிரியர் உறுதி செய்தல்.

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- முகமன் கூறுதல்
- கருத்துக் கோர்வை
- தகவல்களை நிலைநாட்டும் திறன்
- நகைச்சுவை உணர்வு

DRAFT

## குடும்ப வாழ்வியல்

### செயல்பாடு 2

**அருஞ்சொற்பொருள் பட்டியலிடுதல்.**

| | | |
|---|---|---|
| முகில் | – | மேகம் |
| சீர் | – | வரிசை |
| மெய் | – | உடம்பு |
| முதுமை | – | மூப்பு |
| பீடு | – | பெருமை, செருக்கு |
| இம்மி | – | மிகச் சிறிய அளவு |
| வாய்மை | – | உண்மை |
| மைந்தர் | – | பிள்ளைகள் |

### செயல்பாடு 3

**நயம் பாராட்டி எழுதுதல்**

→ குடும்ப வாழ்வியல் என்ற பாடலின் மையக்கருத்தைக் குறிப்பாக எழுதுதல்.

→ இப்பாடலில் இடம்பெற்றுள்ள சொல் நயங்களைக் கண்டறிதல்.

→ சொல் நயம் பற்றிய விளக்கத்தை ஆசிரியர் வழங்குதல்.

**மோனை நயம்**

பாடலில் அடிதோறும் முதல் எழுத்து ஒன்று போல் வருவது மோனை எனப்படும்.

எ.கா

பனை உணவெலாம்
பல்லில்லை உலவுதல்

நன்னில முன்னிலா
நரைத்தது முகத்தொளி

**எதுகை நயம்**

பாடலில் அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒன்று போல் வருவது எதுகை எனப்படும்.

மணவழகர் உடல்நிலை
மணவழகர் முன்பு போல்

DRAFT

**இயைபு**

பாடலில் இறுதிச் சொல்லோ, எழுத்தோ ஒன்று போல் வந்தால் அஃது இயைபு எனப்படும்.

**பொருள் நயம்**

பாடலின் திரண்ட கருத்தை விளக்கி பாடல் கருத்தின் சிறப்புகளையும் எழுதுவது பொருள் நயம் ஆகும்.

**அணிநயம்**

பாடலில் இடம்பெற்றுள்ள அணியைக் கண்டறிந்து எழுதுவது அணிநயம் ஆகும்.

பனையுடல் – உவமை

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- மையக்கருத்து
- சொல்நயம்
- பொருள் நயம்
- அணிநயம்

## ரயில் பயணத்தில்

### செயல்பாடு 4

**சிறுகதை விமர்சனம் செய்து எழுதுதல்.**

→ பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள 'ரயில் பயணத்தில்' என்னும் சிறுகதையை வாசிக்க வைத்தல்.

→ கதையின் மையக்கருத்தை மாணவர்களிடம் கண்டறியச் செய்தல்.

→ கதையின் மையக்கருத்தை ஆசிரியர் விளக்கிக் கூறுதல்.

→ மையக்கருத்தை குறிப்பேட்டில் எழுதச் செய்தல்.

**கதாபாத்திரச் சிறப்புகள்**

- சிறுகதையில் இடம் பெற்றுள்ள கதாபாத்திரங்களின் பெயர்களைக் கூறச் செய்தல்.
- பிடித்த கதாபாத்திரங்கள், பிடித்ததற்கான காரணங்கள் இவற்றைக் குறிப்பேட்டில் எழுதுதல், ஆசிரியர் சரி பார்த்தல்.

DRAFT

## மொழிநடை

- கதையின் மொழிநடை எவ்வாறு அமைந்துள்ளது என்று வினவுதல்.
- வட்டார நடை, பேச்சுவழக்கு நடை, விவரிப்பு நடை, வினாவிடை நடை, தூயத்தமிழ் நடை போன்ற பல நடைகள் உள்ளன என்று ஆசிரியர் கூறுதல்.
- இச்சிறுகதை எழுதப்பட்ட நடைக்குறித்துக் கலந்துரையாடல் நடத்துதல்.
- மாணவர்கள் சேகரித்த தரவுகளை மையப்படுத்திச் சிறுகதை விமர்சனம் எழுதச் செய்தல்.
- சிறந்த விமர்சனக் குறிப்பை வகுப்பில் வெளியிடுதல்.
- ஆசிரியர் சக மாணவர்கள் மதிப்பீடு செய்தல் நன்றாக எழுதிய மாணவர்களைப் பாராட்டுதல்.

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- மையக்கருத்து
- கதாபாத்திரச் சிறப்பு
- விமர்சன மனப்பாங்கு
- சமூகத் தொடர்பு
- வடிவம், மொழிநடை

(இணையம் / பத்திரிக்கை செய்திகளில் இருந்து)

# ஒன்றே உலகம்

## நுழைவுச் செயல்பாடு

ஆசிரியர் த.தொ.நு (ஐசிடி) யின் உதயுடன் 'இந்திய நாடு என் வீடு இந்தியன் என்பது என் பேரு' – என்ற பாடலை ஒளிபரப்புதல் பாடலில் இடம்பெற்ற வரிகளின் கருத்தைக் கூறச் செய்தல்.

- பாடலின் பொருள் என்ன?
- இப்பாடல் சமூகத்திற்கு உணர்த்தும் கருத்து என்ன?
- இப்பாடலை கேட்கும்பொழுது நமக்குள் ஏற்படும் உணர்ச்சிகள் என்ன?

இதுபோன்ற வினாக்கள் மூலம் ஆசிரியர் பாடத்திற்கு ஏற்ற கருத்துக்களைக் கூறச் செய்தல்.

ஒற்றுமை, அனைவரும் ஒன்று, சமத்துவம் போன்ற சொற்களைக் கூறுகின்றனர். இவற்றின் அடிப்படையில் ஆசிரியர் சொற்களை எடுத்துக்காட்டி விளக்குகிறார்.

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' – என்ற திருமூலரின் வரிகளைக் கூறி விளக்கி, கலந்தரையாடல் நடத்துதல். "சமத்துவம்" என்ற பாடப் பகுதிக்குள் அழைத்துச் செல்லுதல்.

(ஆசிரியர்கள் தங்கள் திறன்களுக்கேற்ப நுழைவுச் செயல்பாட்டை அமைத்துக்கொள்ளலாம்)

## சமபந்தி உணவு

### செயல்பாடு 5

**தலையங்கம் தயார் செய்தல்.**

→ ஆசிரியர், இதழ்களில் வந்துள்ள தலையங்க பிரசுரங்களை மாணவர்களுக்கு வழங்குதல்.

→ மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து வெவ்வேறு தலைப்புகளை வழங்குதல்.

→ தலையங்கத்தில் இடம்பெற்றுள்ள செய்திகளைக் கலந்துரையாடச் செய்தல்.

→ கலந்துரையாடல் குறிப்புகள்

- தலைப்பு
- சமகாலப் பிரச்சனை
- காரணம்
- தீர்வு

→ தலையங்கம் என்பது இதழ்களில் இடம்பெறும் செய்திகளுக்கு எல்லாம் முதன்மையானது. பத்திரிக்கை ஆசிரியர் எழுத்தாக அமையும்.

→ விருப்பு வெறுப்பின்றி நடுநிலைத் தன்மையோடு அமைத்தல் வேண்டும்.

→ முழுக் கருத்தையும் விளக்கிக் கூறும் வகையில் தெளிவாக அமைய வேண்டும்.

→ சமகாலப் பிரச்சனைகளை அலசி ஆராய வேண்டும்.

→ சமபந்தி உணவு என்னும் பாடப் பகுதியை மாணவர்களிடம் வாசிக்கச் சொல்லுதல்.

→ பல்வேறு நூல்களில் இருந்து தலையங்கத்திற்குத் தேவையான தகவல்களையும் மேற்கோள்களையும் திரட்ட கூறுதல்.

DRAFT

→ திரட்டிய மேற்கோள்களைச் செம்மைப்படுத்தி வழங்குதல்.

→ சமூகத்தில் நிலவும் சமத்துவ இன்மையையும் அதற்கான காரணங்களையும் தீர்வுகளையும் விளக்கி பத்திரிக்கைக்குத் தலையங்கம் எழுதச் சொல்லுதல்.

### மதிப்பீட்டுக் குறிப்புகள்

- தலைப்பு/ வடிவம்
- சிக்கல்களை அலசி ஆராய்தல்
- தரவுகளைப் பகுப்பாய்வு செய்தல்
- தீர்வு
- மொழிநடை

## புதிய சமூதாயம்

### செயல்பாடு 6

**நயம் பாராட்டி எழுதுதல்**

→ "புதிய சமுதாயம்" என்ற பாடலின் மையக்கருத்தைக் குறிப்பாக எழுதுதல்.

→ பாடலில் இடம்பெற்றுள்ள சொல் நயங்களைக் கண்டறிதல்.

→ சொல் நயம் பற்றிய விளக்கத்தை ஆசிரியர் வழங்குதல்.

**மோனை நயம்**

பாடலில் அடிதோறும் முதல் எழுத்து ஒன்று போல் வருவது மோனை எனப்படும்.

உடலத்தின்

உள்ளத்தின்

**எதுகை**

பாடலில் அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒன்று போல் வருவது எதுகை எனப்படும்.

நாட்டொடு

நடவாதிங்

**முரண்**

முதலாளி X தொழிலாளி

**இயைபு**

பாடலில் இறுதிச் சொல் '...வேண்டும்' என முடிகிறது. இவ்வாறு ஒன்று போல் வந்தால் இயைபு எனப்படும்.

**பொருள் நயம்**

பாடலின் திரண்ட கருத்தை விளக்கி பாடலின் கருத்தின் சிறப்புகளை எழுதுவது பொருள் நயம் ஆகும்.

**அணிநயம்**

பாடலில் இடம்பெற்றுள்ள அணியைக் கண்டறிந்து எழுதுவது அணி நயம் ஆகும்.

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- மொழிநடை
- கருத்து
- வடிவம்
- சொல் நயம்
- அணிநயம்

## முத்து எங்கள் சொத்து

### செயல்பாடு 7

**அனுபவக் குறிப்பு தயார் செய்தல்**

- "முத்து எங்கள் சொத்து" என்ற பாடப் பகுதியை மாணவர்களிடம் வாசிக்கச் செய்தல்.
- முத்துவைப் போல் உங்களுக்கு ஏதேனும் அனுபவம் ஏற்பட்டுள்ளதா?
- உங்கள் அனுபவங்களை நினைவுகூர்ந்து அனுபவக் குறிப்பாக எழுதச் சொல்லுதல்.
- ஆசிரியர் தங்கள் வாழ்க்கையில் கண்ட காட்சிகள், மறக்க முடியாத நிகழ்வுகள் போன்றவற்றை வைத்து முறையான ஒரு மாதிரி அனுபவக் குறிப்பை எழுதி காண்பித்தல்.
- மாணவர்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட மறக்க முடியாத நிகழ்வை அனுபவக் குறிப்பாக எழுத சொல்லுதல்.

DRAFT

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- வடிவம்
- வரிசை முறை
- மொழிநடை
- செய்தி

### செயல்பாடு 8

- கதாபாத்திரச் சிறப்பை எழுதுதல்.
- ஆசிரியர், முத்து எங்கள் சொத்து என்ற பாடப்பகுதியை குழு வாசிப்பிற்கு உட்படுத்துதல்.
- கதையின் மையக்கருத்தைப் புரிந்துகொள்ளுதல்.
- முத்து என்ற கதாபாத்திரத்தை பற்றி எழுதச் செய்தல்.
- இக்கதாபாத்திரம் சமூகத்திற்கு உணர்த்தும் செய்தியை எழுதி வெளியிடச் செய்தல்.

## இனியொரு விதி செய்வோம்

### பாரதச் சமுதாயம்

### நுழைவுச் செயல்பாடு

- பாரதச் சமுதாயம் வாழ்கவே என்னும் பாரதியார் பாடலை காணொளியில் கேட்கச் செய்தல்.
- பாடப்பகுதியில் உள்ள பாடல் வரிகளை உடன்பாடச் செய்தல்.
- பாடலின் கருத்தைக் கூறச் செய்தல்.
- ஆசிரியர் கருத்தை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்துதல்.

### செயல்பாடு 9

**ஒப்பீடு செய்தல்**

தனியொருவனுக் குணவிலை யெனில் ஜகத்தினை அழித்திடு வோம் – எனும் பாடல் வரிகளை இக்காலச் சூழலோடு ஒப்பீடு செய்தல்.

- பாடலின் கருத்தை முழுமையாகப் புரிந்துகொள்ளுதல்.

DRAFT

→ ஒப்பீடு செய்யும் வரிகளின் விரிவான கருத்தை ஆராய்ந்து அறிதல்.

→ அக்கருத்தை இக்காலச் சூழலோடு ஒப்பிட்டு கூறுதல்.

→ குறிப்பாக எழுதுதல்

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- கருத்து
- ஒற்றுமை
- வேற்றுமை
- பகுப்பாய்வு
- தெளிவு

## செயல்பாடு 10

### நிகழ்ச்சிநிரல்

நிகழ்ச்சிநிரல் என்பது ஒரு நிகழ்ச்சியில் நடைபெறும் நிகழ்வுகளை வரிசைப்படுத்தி திட்டமிடுவதாகும். ஒரு விழாவின் படிநிலைகளை அறிவதற்கு நிகழ்ச்சி நிரல் உதவுகிறது.

→ நிகழ்ச்சிகளின் படிநிலைகளைக் குறித்துக் கலந்துரையாடுதல்.

→ மாணவர்களைக் குழுக்களாக அமரச் செய்து நிகழ்ச்சிநிரல் தயாரித்தல்.

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- வடிவம்
- மொழிநடை
- கருத்து

DRAFT

## நிகழ்ச்சி நிரல்

**அரசு உயர்நிலைப் பள்ளி, பாலக்காடு**

**பொருளாதார வளர்ச்சியில் கேரளம்**

| | | |
|---|---|---|
| நாள் | : | டிசம்பர் 15 |
| இடம் | : | பள்ளிக் கலையரங்கம் |
| நேரம் | : | காலை 10 மணி |
| இறை வணக்கம் | : | பள்ளி மாணவியர் |
| வரவேற்புரை | : | தமிழ் ஆசிரியர் |
| தலைமையுரை | : | தலைமையாசிரியர் |
| சிறப்புரை | : | மாண்புமிகு நிதி அமைச்சர் |
| வாழ்த்துரை | : | பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் |
| நன்றியுரை | : | பள்ளி மாணவத் தலைவர் |

# நாட்டு பாடல் காட்டும் பொருளியல்

## நுழைவுச் செயல்பாடு

ஆசிரியர், சில நாட்டுப்புறப் பாடல்கள் அடங்கிய வீடியோ காட்சிகளைக் காண்பித்தல். (புஷ்பவனம் குப்புசாமி, புதுகை மகா, தேக்கம்பட்டி சுந்தர்ராஜன்)

காட்சியின் அடிப்படையில் சில வினாக்களை வினவுதல்.

- → நாட்டுப்புற பாடல்களை விரும்பி கேட்கின்றவர்கள்? பாடுகின்றவர்கள் யார்?
- → நாட்டுப்புறப் பாடல்களின் வகைகள்?
- → நாட்டுப்புறவியலின் பிரிவுகள்?
  - பாடல்கள்
  - கதைகள்
  - ஆடல்கள்
  - பழமொழிகள்

DRAFT

- விடுகதைகள்
- விளையாட்டுக்கள்
- நம்பிக்கைகள்

→ நாட்டுப்புறப் பாடல்களின் சிறப்புகள் / தனித்தன்மைகள் யாவை?

→ நாட்டுப்புறப் பாடல்கள் உருவாகுவதற்கான சூழல்?

இதுபோன்ற வினாக்களை எழுப்பிக் கலந்துரையாடல் நடத்துதல்.

**நாட்டுப் பாடல் காட்டும் பொருளியல் சிந்தனைகள்.**

- பண்டைய காலத்தில் மக்கள் தம் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்துகொள்ளப் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டனர். என்றாலும் முதலாளி வர்க்கத்தினரால் சுரண்டலுக்கு ஆளான ஏழை, எளியவர் (கூலித் தொழிலாளர்கள்) தங்கள் இயலாமையினைப் பாடல்கள் மூலம் வெளிக்காட்டினர்.

## செயல்பாடு 11

**தூயத் தமிழ்ச் சொற்கள்**

→ மாணவர்களை மூன்று குழுவாகப் பிரித்தல்.

→ பாடப்பகுதியை குழு வாசிப்பிற்கு உட்படுத்துதல்.

→ பாடப்பகுதியில் உள்ள வட்டார சொற்களுக்கு இணையான தூயத் தமிழ்ச் சொற்களைக் கண்டறிய செய்தல்.

| | | |
|---|---|---|
| ஆத்து | – | ஆறு |
| சேத்து | – | சேறு |
| நாத்து | – | நாற்று |
| கீத்து | – | தென்னங் கீற்று |
| சோத்து | – | சோறு |

**மதிப்பீட்டுக் குறிப்பு**

➢ தூய தமிழ்ச் சொற்கள்

## செயல்பாடு 12

**விளக்கக் குறிப்பு எழுதுதல்.**



DRAFT

→ முக்கியமான குறிப்புகள்.

- விளக்கக் குறிப்பு ஒரு குறிப்பிட்ட தலைப்பின் சம நிலையான பகுப்பாய்வை முன் வைப்பதாகும்.
- தெளிவு மற்றும் புரிதலை வெளிப்படுத்தும் வகையில் அமைய வேண்டும்.
- சான்றுகள் எடுத்துக்காட்டுகள் இடம்பெற வேண்டும்.
- ஒரு குறிப்பிட்ட தலைப்பை பற்றிய துல்லியமான பாரபட்சமற்ற நிலையில் ஒழுங்கமைவுடன் எழுத வேண்டும்.

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- மொழிநடை
- கருத்துகள்
- மேற்கோள்கள்

## வளப்பகுதி

"ரயில் பயணத்தில்" என்ற கதையினை விமர்சனம் செய்து எழுதுதல்.

கதை விமர்சனத்தின் முக்கிய கூறுகள்.

**மைக்கருத்து**

இல்லை பசியும் தாகமும் அனைவருக்கும் ஒன்று தொழில் என வேறுபாடு வறுமையில் வாடும் தொழிலாளர்கள் நிலை மாற வேண்டும். தொழிலாளி முதலாளி என்ற வேறுபாடு மாற வேண்டும். எல்லோரும் ஒன்று என்ற நிலை வர வேண்டும்.

**முதியவர்கள் சகமாக சமையா என்னும் தலைப்பில் பட்டிமன்றம் குறிப்பு தயாரித்தல்.**

முதியவர்களா சுகமா?

முதியவர்கள் சமுதாயத்தில்ஆணிவேர். முதியோர் பல ஆண்டுகளாக குடும்பம் மற்றும் சமூதாயத்திற்கு முக்கிய பங்கு வகித்தனர். அவர்கள் வாழ்க்கை அனுபவமும் அறிவும் இளைய தலைமுறைக்கு வழிகாட்டியிருக்கின்றன.

எதிர்கால இளம் தலைமுறையின் மாதிரியாகவும் வழிகாட்டியாகவும் இருப்பவர்கள் முதயிவர்கள்.

முதியோர்கள் இல்லாத குடும்பம் பல்வேறு பிரச்சினைகளைச் சந்திக்கிறது.

வேலைக்காக செல்லும் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை சரிவர கவனிப்பது இல்லை. வீட்டில் முதியோர்கள் இருந்தால் பிள்ளைகளை ஒழுக்கத்தோடு வளர்க்கவும் அன்போடு பரிமாரிக்கவும் உறுதுணையாக இருப்பார்கள்.

DRAFT

முதியவர்கள் சுமையா?

முதியவர்களின் அறிவுரையை இன்றைய தலைமுறையினர் விரும்பவில்லை.

முதியோர்களின் மதிப்பதற்கு இன்றைய சமுதாயம் தவறி விடுகிறது.

குடும்பத்தில் முதியோர்களை சுமையாகவும் அதிக பற்றாகவும் கருதுகின்றனர்.

இதனால் முதியோர் இல்லங்கள் பெருகுகின்றன.

ஆரோக்கியம் பணம் பாதுகாப்பு அரவணைப்பு தேவைப்படும் காலம் முதுமை காலம். பெறும்பாலான முதியோருக்கு இவை ஏதும் கிடைப்பதில்லை.

முதியோர்கள் சமூகத்தில் ஒரு சுமை அல்ல சுகமே முதியோர்களை முதியோர் இல்லங்களில் விடுவதை தவிர்க்க வேண்டும் பெற்றோர்களைப் போற்றி பாதுகாப்பது நம் கடமை.

இரண்டு சொற்களை கொண்ட தொகைக் சொல்லில் முதற்சொல் உவமைச் சொல்லாக இருந்தால் அது உவமைத் தொகை எனப்படும்.

உவமை என்பது ஒரு பொருளை அதனுடன் தொடர்புடைய மற்றொரு பொருளோடு ஒப்பிட்டு கூறுவது. உவமை தொடரில் உவமை முன்னும் உவமையும் பின்னமாக வரும்.

எடுத்துக்காட்டுகள்

பவளவாய்

தாமரை முகம்

கயல் விழி

மதிமுகம்

**உம்மைத்தொகை**

உம்மைத்தொகை என்பது இரண்டு சொற்களுக்கு இடையிலும் அல்லது இறுதியிலும் உம் என்னும் இடைச்சொல் மறைந்து வருவது.

எடுத்துகாட்டுகள்

இரவு பகல்

கை கால்

நான் நீ

தாய் தந்தை

DRAFT

## சிலேடை அணி

ஒரு சொல் அல்லது சொற்றொடர் இரு பொருள் பட வருவது சிலேடை அணி எனப்படும். இதனை இரட்டுற மொழிதல் அணி என்றும் அழைப்பர். செய்யுள்களிலும் உரைநடையிலும் மேடை பேச்சுகளிலும் சிலேடைகள் பயன்படுத்தப்படுகின்றன. காளமேகப்புலவர் பல சிலேடைப் பாடல்களை இயற்றி இருக்கிறார்.

எடுத்துக்காட்டு

சந்திரனுக்கும் மலைக்கும்

நிலவாய் விளங்குவதலால் நீள்வான்

படிந்து சிலபோது உலாவுதலாற் சென்று – தலை மேல்

உதித்து வரலால் உயர் மாமலையை

மதிக்கும் நிகராக் வழுத்து

**விளக்கம்**

சந்திரன் நிலவாக விளங்குகிறது. நீண்ட வானத்தில் படிந்து சில நேரங்களில் உலாவுகிறது. தலைக்கு மேல் தோன்றி வருகிறது. மலையானது நிலத்தின் வாய்போல பிளவு அடுக்குகளோடு காட்டப்படுகிறது. நீண்ட வானத்தில் படிந்திருப்பது போல் தோன்றுகிறது. சில வேலைகளில் நாம் மலைமேல் உலாவி வருகிறோம். நம்மில் உயரமாக தோன்றுகிறது.

DRAFT

# 1 நலம் விரும்பு

**அலகு அறிமுகம்**

மனித வாழ்வில் எத்தனை செல்வங்கள் இருப்பினும் ஆரோக்கியம் மிகவும் அவசியமாகிறது. நாம் சாப்பிடக்கூடிய உணவுகளே நம் உடல் நலத்தைத் தீர்மானிக்கிறது. எனவே, உணவும் ஆரோக்கியமும் இரண்டறக் கலத்தே இயங்குகின்றது. 'உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' என்னும் திருமூலரின் வரிகளை இங்கு நினைவு கூறுவது மிகவும் பொருத்தமுற அமையும். ஆனால், இன்றையச் சூழலில் மனித இனம் துரித உணவுகளின் பின்னால் சென்று உடல் நலத்தைச் சீரழிக்கும் நிலை காணப்படுகிறது. இதனை மையப்படுத்தி ஆரோக்கியமான வாழ்க்கையை முன்னிறுத்தி இவ்வலகு வடிவமைக்கப்பட்டுள்ளது.

அமுதசுரபி என்னும் இணைக்கருத்தலகின் கீழ், உணவே உயிர், சோற்றுக்கு வந்த பஞ்சம், பழையசோறு போன்ற பாடப்பகுதிகள் இடம்பெற்றுள்ளன. இரண்டாம் கருத்தலகான நோய் நொடியில் வனமூதாட்டி சும் தரும் சித்த மருத்துவம், சித்த மருத்துவம் சிறந்ததுவே என்னும் பாடப்பகுதிகள் இயற்கை மருத்துவத்தின் சிறப்பகளை எடுத்துரைக்கின்றன. டிஜிட்டல் உலகு எனும் துணையலகில் வாமனம் தோற்றதம்மா, அன்புபேசி, மருத்துவ நேர்காணல் போன்ற பகுதிகள் ஆரோக்கிய வாழ்விற்கான வழிமுறைகளை எடுத்துக் கூறுகிறது.

இந்த அலகைக் கற்பிக்கத் தேவையான காலம்
20 பிரிவுவேளைகள்

DRAFT

DRAFT

| கரு | துணைக்கரு | இலக்கிய வடிவங்கள் | கற்றல் இலக்குகள் | | | மொழிக் கூறுகள் | மொழி வெளியீட்டு வடிவங்கள் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | கருத்துகள் | திறன்கள் | மனப்பான்மைகள் | | | |
| சுகாதாரம் (நலம் விரும்பு) | உணவு அன்றும் இன்றும் (அமுத சிரபி)<br><br>சித்த மருத்துவம் (நோய் நாடி)<br><br>சமூக சுகாதாரம் (டிஜிட்டல் உலகு) | • கட்டுரை<br>• விளக்கக் குறிப்பு<br>• அனுபவக் குறிப்பு<br><br>• அனுபவக் கட்டுரை<br>• விளக்கக் குறிப்பு<br>• கவிதை<br><br>• கவிதை<br>• சிறுகதை<br>• நேர்காணல் | • நல்ல உணவுப் பழக்கவழக்கங் களைக் கடைபிடிக்க வேண்டியது அவசியமாகும்.<br>• துரித உணவுகளைத் தவிர்த்தால் ஆரோக்கிய மேம்படும்.<br>• உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வதில் சித்த மருத்துவம் முக்கியப் பங்கு வகிக்கின்றது.<br>• நோயற்ற வாழ்வே மகிழ்ச்சியான வாழ்வைத் தருகிறது. | • கவிதைகளைக் குரல் ஏற்ற இறக்கத்துடன் வாசித்தல்.<br>• தலைப்பிற்கேற்ற தரவுகளைத் திரட்டி பகுப்பாய்வு செய்து வகைப்படுத்தி கட்டுரை எழுதுதல்.<br>• கருத்தை, பிறர் ஏற்கும் வகையில் சொல்லாட்சிகளைப் பயன்படுத்தி உறுதிமொழி எழுதுதல்.<br>• கருத்துகளைத் தொகுத்துப் பகுப்பாய்வுச் செய்து சொற்பொழிவுரை எழுதுதல்.<br>• நிகழ்ச்சிகளைத் தொகுத்துச் சுருக்கமாக பத்திரிகைச் செய்தி எழுதுதல். | • நல்ல உணவுப் பழக்கவழக்கங் களைக் கடைப்பிடிக்க வேண்டும்.<br>• துரித உணவுகளைத் தவிர்க்க வேண்டும்.<br>• பாரம்பரிய உணவுகளை அழிவிலிருந்து மீட்டெடுக்க வேண்டும்.<br>• ஆரோக்கியமாக வாழ்வதற்கு உடற்பயிற்சி, யோகா ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டும். | • அருஞ்சொற் பொருள் எழுதுதல்<br>• பாடல்களைக் குரல் ஏற்றத்தாழ்வுடன் வாசித்தல்<br>• தெளிவாகத் தொடர்களை அமைத்தல்<br>• தூயத் தமிழ்நடையில் எழுதுதல். | • வாசிப்பு<br>• கட்டுரை<br>• உறுதிமொழி<br>• சொற்பொழிவுரை<br>• பத்திரிகைச் செய்தி | • சுய மதிப்பீடு<br>• குழு மதிப்பீடு<br>• ஆசிரியர் மதிப்பீடு<br>• மதிப்பீட்டுக் குறிப்பு களின் அடிப் படையில் மதிப்பீடு செய்தல். |

## கற்றல் இலக்குகள்

- ❖ சங்க கால உணவு முறைகளையும் பழக்க வழக்கங்களையும் கண்டறிந்து பல்வேறு மொழி வெளியீட்டு வடிவங்களில் வெளியிடுகிறார்கள்.
- ❖ பண்டைக்கால, தற்கால உணவு முறைகளை ஒப்பீடு செய்து குறிப்பு/ விமர்சனக் குறிப்பு எழுதுகிறார்கள்.
- ❖ சித்த மருத்துவத்தின் முக்கியத்துவத்தையும் சிறப்புகளையும் வெளியிடும் வகையில் கட்டுரை/ சொற்பொழிவுரை தயார் செய்கிறார்கள்.
- ❖ அலைபேசியின் நன்மை தீமைகளை எடுத்துக்கூறும் வகையில் பல்வேறு மொழி வெளியீட்டு வடிவங்களில் வெளியிடுகிறார்கள்.
- ❖ இணையக் குற்றங்கள் அதிகரிப்பதற்கான காரணங்களையும் தவிர்ப்பதற்கான வழி முறைகளையும் எடுத்துக் கூறி மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பத்திரிகைச் செய்தி எழுதுகிறார்கள்.

## துணைக்கருவிகள்

- காணொளிக் (வீடியோக்) காட்சிகள் (சொற்பொழிவு, பட்டிமன்ற உரை)
- பத்திரிகைச் செய்திகள்
- நேர்காணல்கள், அனுபவக் குறிப்பு
- குறும்படங்கள்
- நூலகம்
- பாடநூல்
- ஆசிரியர் பனுவல்

DRAFT

## பாடப்பகுதிகள்

### நலம் விரும்பு

**அமுத சுரபி**

- உணவே உயிர்
- சோற்றுக்கு வந்த பஞ்சம்
- பழையசோறு

**நோய் நாடி**

- வன மூதாட்டி
- சுகம் தரும் சித்த மருத்துவம்
- சித்த மருத்துவம் சிறந்ததுவே!

**டிஜிட்டல் உலகு**

- வாமனம் தோற்றதம்மா!
- அன்பு பேசி
- மருத்துவ நேர்காணல்

### நுழைவுச் செயல்பாடு

- ❖ மனித வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகள் எவை என வினவுதல் (உணவு, உடை, உறைவிடம்)
- ❖ உணவு வகைகளை எவ்வாறெல்லாம் பிரிக்கலாம் (பாரம்பரிய உணவுகள், துரித உணவுகள்)
- ❖ பண்டைய காலங்களில் காலை உணவாக எதை உண்டார்கள்? (பழைய கஞ்சி)
- ❖ உங்களுக்கு விருப்பப்பட்ட உணவுகள் எவை எல்லாம்?
- இவ்வினாக்கள் வழியாக உணவின் இன்றியமையாமையைப் பற்றி கூறச் செய்தல்.

## உணவே உயிர்

### செயல்பாடு 1

**ஐவகை நிலங்களும் உணவு வகைகளும் என்ற தலைப்பில் கட்டுரை தயார் செய்தல்.**

→ ஐவகை நிலங்களின் பெயர்களை எழுதச் செய்தல்.

→ நிலங்களில் உண்ணப்படும் உணவுகளின் பெயர்களை எழுதச் செய்தல்.

→ கட்டுரையின் வடிவத்தைக் கரும்பலகையில் ஆசிரியர் எழுதுதல்.
→ மாணவர்கள் எழுதிய குறிப்புகளை வகுப்பறையில் வாசிக்கச் செய்தல்.
→ கட்டுரை எழுதச் செய்தல்.

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- வடிவம்
- மொழிநடை
- கருத்துகளைத் திரட்டுதல்.
- பகுப்பாடு செய்தல்
- மேற்கோள் பயன்பாடு

## செயல்பாடு 2

**சிறந்த நாட்டின் இலக்கணமாக வள்ளுவர் கூறுவனவற்றை விளக்கி எழுதுதல்.**

→ திருக்குறளை கரும்பலகையில் ஆசிரியர் எழுதுதல்.
→ பொருள் விளக்கம் அளித்தல்.
→ பாடலின் பொருளை மாணவர்கள் குறிப்பு ஏட்டில் எழுதி வாசிக்கச் செய்தல்.
→ ஆசிரியர் கருத்துகளை மேம்படுத்துதல்.

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- பொருளை விளக்கும் விதம்
- மொழிநடை
- கருத்துக்களின் தெளிவு

## செயல்பாடு 3

**தலையங்கம்**

**'உணவு உயிர்' – தலையங்கம் தயாரித்தல்**

→ ஆசிரியர் நாளிதழ்களில் இடம் பெற்றுள்ள தலையங்க மாதிரி படிவங்களை மாணவர்களுக்கு வழங்கி குழுக்களாக வாசிக்கச் செய்தல்.
→ தலையங்கத்தில் இடம் பெறவேண்டிய செய்திகளை ஆசிரியர் விளக்கிக் கூறுதல்.
→ உணவு பற்றிய செய்திகளை குறிப்பேட்டில் எழுதச் செய்தல்.
→ மாணவர்கள் அதை வாசிக்கும் போது ஆசிரியர் கருத்துகளை மேன்மை அடையச் செய்தல்.

→ மாணவர்கள் எழுதிய தலையங்கத்தை வகுப்பறையில் கலந்துரையாடச் செய்தல்.

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- தலைப்பு
- வடிவம்
- மொழிநடை
- காரண காரிய தொடர்பு
- தீர்வு

## சோற்றுக்கு வந்த பஞ்சம்

### செயல்பாடு 4

**சோற்றுக்கு இணையாக வந்துள்ள சொற்களைக் கண்டறிதல்.**

→ பாடப்பகுதியை வாசிக்கச் செய்தல்.

→ சோறு என்பதன் வேறு சொற்களைக் கண்டுபிடித்து குறிப்பேட்டில் எழுதச் செய்தல்.

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- சொற்களை இனங்காணுதல்
- வரிசைப்படுத்துதல்

### செயல்பாடு 5

**சொற்பொழிவுரை**

**'தமிழர்களின் முக்கிய உணவு சோறு' என்னும் தலைப்பில் சொற்பொழிவு உரை தயார் செய்தல்.**

→ பாடப்பகுதியை வாசிக்கச் செய்தல்.

→ சோற்றைப் பற்றி வரும் குறிப்புகளைக் குறிப்பேட்டில் எழுதச் செய்தல்.

→ மாணவர்களுக்கு த.தொ.நு ஐப் பயன்படுத்தி ஒன்றிரண்டு சொற்பொழிவைக் காணொளி மூலம் காணச் செய்தல்.

→ தலைப்பிற்கு ஏற்ற செய்திகளை நூலகம், இதழ்கள், காணொளி போன்றவற்றின் மூலம் திரட்ட செய்தல்.

→ திரட்டிய குறிப்புகளை வகுப்பில் வெளியிடச் செய்தல்.

DRAFT

→ சொற்பொழிவின் அமைப்பை மாணவர்களுக்கு விளங்க வைத்தல் (அங்க போயிட்டு பாதி வரைக்கும் இழுத்துட்டு உக்காந்தா போதும் திரும்பி வரும்போது நம்ப அப்படியே போட்டுட்டு வரலாம்.)

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- முகமன் கூறுதல்
- வடிவம்
- கருத்துத் தெளிவு
- மொழிநடை
- மேற்கோள்

## பழைய சோறு

## செயல்பாடு 6

**பழைய சோற்றின் நன்மைகள்**

→ பாடப்பகுதியை வாசிக்கச் செய்தல்.

→ மாணவர்கள் புரிந்து கொண்ட செய்திகளை வெளியிட்டு ஒரு கலந்துரையாடல் நடத்துதல். அதன் அடிப்படையில் பழைய சோற்றின் நன்மைகளை பட்டியலிடச் செய்தல்.

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- பட்டியலிடுதல்
- மொழிநடை

## செயல்பாடு 7

பட்டிமன்றக் குறிப்புகள்

→ தலைப்பிற்கு ஏற்றவாறு குறிப்புகளைத் திரட்ட செய்தல்.

→ மாணவர்களை இரு குழுக்களாக பிரித்து கருத்துகளை வெளியிட செய்தல்.

→ பட்டிமன்றம் நடைபெறும் முறையினை ஆசிரியர் விளக்குதல்.

→ குறிப்பேட்டில் குறிப்புகளை எழுதுதல்.

DRAFT

### மதிப்பீட்டுக் குறிப்புகள்

- ➢ கருத்துக் கோர்வை
- ➢ வெளியிடும் முறை
- ➢ மொழிநடை
- ➢ மேற்கோள் பயன்பாடு

## நோய் நாடி

### நுழைவுச் செயல்பாடு

- உங்களுக்கு உடல்நிலை சரியில்லாமல் போனால் என்ன செய்வீர்கள்?
- எத்தனை வகையான மருத்துவ முறைகள் உள்ளன?
- உங்கள் வீட்டில் பாட்டி போன்ற வயதானவர்கள் சில மருத்துவ முறைகளை பின்பற்றுகிறார்கள் அல்லவா. அதற்கு என்ன பெயர்?
- பக்க விளைவு இல்லாத மருத்துவ முறை எது?
- கொரோனா காலத்தில் நாம் கபசுர குடிநீரைப் பயன்படுத்தினோம் அல்லவா. அது எந்த மருத்துவ முறையில் அடங்கியது?
- இவ்வாறு சித்த மருத்துவத்தைப் பற்றி வினவி பாடப் பகுதிக்கு செல்லுதல்.
- சித்த மருத்துவம் என்றால் என்ன என்பதை புரிய வைத்தல்.

## சுகம் தரும் சித்தமருத்துவம்

### செயல்பாடு 8

**உறுதி மொழி தயார் செய்தல்**

**சித்த மருத்துவத்தை பேணிப் பாதுகாக்க வேண்டும் – உறுதிமொழி தயார் செய்தல்.**

- → உறுதிமொழி பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் உருவாக்கப்பட வேண்டும்.
- → சித்த மருத்துவத்தை பற்றியும் அதனால் ஏற்படும் நன்மைகளைப் பற்றியும் கலந்துரையாடல் நடத்த மாணவர்களை ஆயத்தப்படுத்துதல்.
- → குறிப்புகளை எழுதி வாசிக்கச் செய்தல் உறுதிமொழியின் வடிவத்தை ஆசிரியர் விளக்கி கூறி எழுதச் செய்தல்.

DRAFT

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- வடிவம்
- மொழிநடை
- கருத்து

## செயல்பாடு 9

**அகத்தியர் பற்றி குறிப்புத் தயாரித்தல்**

→ அகத்தியர் பற்றி ஆசிரியர் முன்னறிவு வழங்குதல்.

→ இணையம், நூலகம் வழி அகத்தியர் பற்றி குறிப்புகள் தேடி ஆராயச் சொல்லுதல்.

→ குறிப்புகளை குறிப்பேட்டில் எழுதி வெளியிடச் செய்தல்.

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- வடிவம்
- கருத்துக் கோர்வை
- மொழி நடை

## செயல்பாடு 10

**உணவு முறைகள் பற்றி விளக்கக் குறிப்பு.**

→ பாடப்பகுதியை வாசிக்கச் செய்தல்.

→ மருத்துவர் பாஸ்கரன் கூறும் உணவு முறைகள் பற்றி குறிப்புகள் எழுதச் செய்தல்.

→ வகுப்பறையில் விளக்கிக் கூறச் செய்தல்.

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- வடிவம்
- கருத்துக் கோர்வை
- மொழி நடை

DRAFT

## சித்த மருத்துவம் சிறந்ததுவே!

### செயல்பாடு 11

நயம் பாராட்டி எழுதுதல்

'அடர்ந்த அசுத்தக் காற்றிழுத்தே

……………………………………………

……………………………………………

உடல்நலம் காத்தார் நீள்வாழ்ந்தார்'

→ என்ற பாடல் வரிகளின் பொருளை ஆசிரியர் விளக்கிக் கூறுதல்.

→ நயம் பாராட்டி எழுதும் முறையினை ஆசிரியர் விளக்கிக் கரும்பலகையில் எழுதுதல்.

→ மாணவர்களை எழுதச் சொல்லி வகுப்பறையில் வாசிக்கச் செய்து ஆசிரியர் மதிப்பீடு செய்தல்.

→ வேறு சில பாடல்களையும் இதைப் போல் எழுதச் செய்தல்.

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- பாடலின் பொருள் விளக்கம்
- வடிவம்
- மொழிநடை
- சொல்நயம், பொருள்நயம், அணிநயம் (எதுகை, மோனை, இயைபு, உவமை நயம்)

### செயல்பாடு 12

பாடல் வரிகளை விமர்சனம் செய்தல்.

'குடலின் தூய்மை உடல் தூய்மை

……………………………………………

……………………………………………

உயிரை மாய்ப்பது குடி என் பேர்'

→ என்ற பாடல் வரிகளை ஆசிரியர் கரும்பலகையில் எழுதுதல்.

→ விமர்சனம் என்றால் என்னவென்பதை ஆசிரியர் விளக்குதல். (விமர்சனம் என்பது ஒரு கதையையோ கவிதையையோ மதிப்பீடு செய்து தன்



DRAFT

சுய மதிப்பீட்டை வெளியிடுவது. ஒரு படைப்பு சமூகத்திற்கு அளிக்கும் கருத்துக்களை நிறை குறையுடன் வெளிப்படுத்துவது ஆகும்)

- → மாணவர்களை கவிதையை வாசிக்க செய்து தங்கள் கருத்துக்களை கூறச் செய்தல்.
- → மையக் கருத்து உணர்த்தும் செய்தியைக் கலந்துரையாடச் செய்தல்.
- → சுய மதிப்பீடு செய்தல்.

### மதிப்பீட்டுக் குறிப்புகள்

- ➢ பாடல் விளக்கம்
- ➢ மொழிநடை
- ➢ விமர்சனக் குறிப்பு
- ➢ சமூகத்திற்கு உணர்த்தும் செய்திகள்

## டிஜிட்டல் உலகு

### நுழைவுச் செயல்பாடு

- 2020 இல் நமது உலகத்தையே பாதித்த நோய் எது?
- கொரோனாவால் உங்கள் அன்றாட வாழ்க்கை எவ்வாறெல்லாம் பாதிக்கப்பட்டது. (தொழில், கல்வி, உடல் – மனநலம், உணவுப் பொருள் பற்றாக்குறை)
- கல்வி கற்க பள்ளிக்கூடம் சென்றீர்களா?
- அலைபேசி எவ்வாறெல்லாம் கல்வி கற்க பயன்பட்டது?
- அலைபேசி பயன்படுத்திய போது என்னென்ன நன்மை தீமைகள் ஏற்பட்டன?
- இன்றைய காலகட்டத்தில் மாணவர்கள் அலைபேசியை எதற்கெல்லாம் பயன்படுத்துகிறார்கள்?
- இவ்வாறு பாடப்பகுதிக்குள் அழைத்துச் செல்ல வேண்டும்.

### செயல்பாடு 13

## அன்பு பேசி

**அன்புபேசி என்ற கதையை விமர்சனம் செய்தல்.**

- → கதைப் பகுதியை வாசிக்க செய்தல்.
- → கதையின் மையக்கருத்தை கூறச் செய்தல்.

DRAFT

- → கதையை திறனாய்வு செய்யும் முறை பற்றி ஆசிரியர் விளக்கிக் கூறுதல் (மையக்கருத்து, பாத்திரப்படைப்பு, மொழிநடை, உத்தி).
- → மாணவர்களை கலந்துரையாடச் செய்து குறிப்புகள் தயார் செய்தல்.
- → மாணவர்கள் கூறும் கருத்துக்களை ஆசிரியர் மேன்மை அடையச் செய்தல்.

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- ➢ மையக்கருத்து
- ➢ பாத்திரப்படைப்பு
- ➢ உத்திகள்
- ➢ மொழிநடை
- ➢ விமர்சனப் பாங்கு

### செயல்பாடு 14

**இணையக் குற்றங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்ளும் வழிமுறைகள் – வரிசைப்படுத்துதல்.**

- → இணைய குற்றங்கள் எவையெல்லாம் என்பதைப் பற்றி ஆசிரியர் விளக்கம் அளித்தல்.
- → இணைய குற்றங்களால் ஏற்படும் சமூகப் பாதிப்புகளை ஆசிரியர் கூறி செல்லுதல்.
- → இது போன்ற நிகழ்வுகள் பற்றிய அனுபவங்களை மாணவர்களிடம் கூறச் செய்தல்.
- → இவற்றில் இருந்து எவ்வாறெல்லாம் நம்மை பாதுகாக்க முடியும் என்பதை பற்றி கலந்துரையாடச் செய்தல்.

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- ➢ கருத்துக் கோர்வை
- ➢ மொழிநடை

## மருத்துவ நேர்காணல்

### செயல்பாடு 15

பத்திரிக்கை செய்தி தயார் செய்தல்.

- → ஆசிரியர் செய்தித்தாள்களில் வரும் செய்திகளைக் காண்பித்து அதன் வடிவத்தைப் பற்றி விளக்குதல்.

DRAFT

→ ஒரு செய்தியைக் கொடுத்து மாணவர்களை பத்திரிக்கை செய்தி எழுதச் செய்தல்.

→ நிறை குறைகளைச் சுட்டிக்காட்டி ஆசிரியர் மேம்படுத்தித் கொடுத்தல்.

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- வடிவம்
- மொழி நடை
- கருத்துக் கோர்வை

## வளப் பகுதிகள்

சிறந்த நாடு – வள்ளுவர் கூறும் இலக்கணம்

திருவள்ளுவர் எழுதிய திருக்குறளில் அமைந்துள்ள பொருட்பாலில் 74 ஆம் அதிகாரம் நாடு என்பதாகும் இந்த அதிகாரத்தில்,

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்

சேராது இயல்வது நாடு.

என்ற குறல் இடம்பெறுகிறது. சிறந்த நாடு என்பது மிகுந்த பசி நீங்காத நோய் பகைவர்களால் தாக்கப்படுதல் போன்றவை இல்லாமல் இருப்பது ஆகும். ஏற்ற பருவ காலத்தில் விலைப் பொருட்கள் உற்பத்தி செய்யாமல் போனாலும் உழவர்களுக்கு உரிய உடைமைகள் இல்லாமல் போனாலும் இயற்கை பேரிடர்களாலும் உணவு உற்பத்தி தடைப்படும். அப்போது வறுமை ஏற்பட்டு நாட்டில் மிகுந்த பசி நிலவும் நோய்கள் ஏற்படும் உயிர்கள் இறந்துவிடும். மேலும் ஒரு நாடு பகைமை இல்லாமல் மற்ற நாடுகளுடன் நட்புறவுடன் இருக்க வேண்டும். ஆகவே பசிப்பிணி, பகை இல்லாமல் இருப்பதே ஒரு சிறந்த நாடாகும்.

சோற்றுக்கு இணையாக வந்துள்ள சொற்கள்.

கூழ் அன்னபூரணி உண்டி

பொற்கை அன்னம் அழுப்பு

அன்னலட்சுமி அமுது புழுக்கல்

ஊண் பருக்கை அவில்

அடிசில் அயினி அமலை

தற்கால நெல் வகைகள்

பாசுமதி, ஜோஹா, ஜோதி, நவரை, பொன்னி, ஜெயா, பாலக்காடு மட்டா, சோனா, மசூரி, கைரளி, வாடன் சம்பா, களர் சம்பா... போன்ற பிறவகைகள்.

'செஞ்சோற்றுக் கடன்' பொருள் விளக்கம்.

நல்லதொரு உணவை ஒருவரிடம் இருந்து பெற்று உண்பவன் அவரிடம் என்றென்றும் நன்றி உள்ளவனாக இருத்தலை குறிக்கிறது. உப்பிட்டவரை உள்ளளவும் நினை என்ற பழமொழியை இதற்கு ஒப்பிடலாம். மகாபாரத கதையில் வரும் கர்ணன் துரியோதனிடம் காட்டிய நன்றியையும் ராமாயணத்தில் கும்பகர்ணன் ராவணனிடம் காட்டிய நன்றியையும் இதற்கு எடுத்துக்காட்டாக கூறலாம்.

பழைய சோற்றின் நன்மைகள்

- பழையசோறு நொதித்த உணவானதால் குடலுக்கு நல்லது.
- நோய் எதிர்ப்பு சக்தியை தூண்டும்.
- உயர் ரத்த அழுத்தம் குறைக்கும்.
- சருமம், முடி ஆரோக்கியத்திற்கும் சிறந்தது.
- உடலுக்கு குளிர்ச்சியைத் தரும்.
- வைட்டமின்கள் தாதுக்கள் நிறைந்தது.
- உடல் எடை குறையும்.
- வயிற்றுப்புண் குடல் அழற்சி சீராகும்.
- பக்கவாதம் ஏற்படாது.
- உடலில் நீர் பற்றாக்குறையைக் குறைக்கிறது.

மூலிகைச் செடி வளர்ப்பதன் நன்மைகள்.

- சளி காய்ச்சல் இருமல் தலைவலி கிருமி நாசினி – துளசி கற்பூரவல்லி
- ஜீரண கோளாறுகள் பசியின்மை தூண்டும் – துளசி
- மாசுக்களை உறிஞ்சி சுத்தமான சூழலை உருவாக்கும் – கற்பூரவள்ளி
- சமையல் செய்ய – புதினா, கருவேப்பிலை
- மூட்டு வலி, வீக்கம், சிறுநீரக கல் கரைத்தல், ரத்தத்தில் உள்ள விஷத்தன்மையை வெளியேற்றுதல் – தூதுவளை, வில்வம்
- மஞ்சள் காமாலை அல்சர் ஞாபக சக்தி தொழுநோய் யானைக்கால் வியாதி – வல்லாரை

DRAFT

அகத்தியர் பற்றிய குறிப்புகள்

- ❖ தமிழ் சித்தர்களின் முதன்மையானவர்.
- ❖ சப்த ரிஷிகளில் ஒருவர்
- ❖ நீரின் மேல் படுத்தபடியே 12 ஆண்டுகள் கடும் தவம் புரிந்து அறிய ஆற்றல்களைப் பெற்றவர்.
- ❖ பொதிகை மலையில் தங்கி முருகப்பெருமான் ஆணைப்படி அகத்தியம் என்ற நூலை இயற்றினார்.
- ❖ ராமபிரானுக்கு சிதையை போதித்தவர்.
- ❖ பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பல நோய்களுக்கும் மருத்துவ குறிப்புகள் வழங்கியவர்.
- ❖ தமிழ் முனிவர், மாதவமுனிவர், குருமுனி, திருமுனி, குடமுனி, மாமுனி என பல பெயர்களால் அழைக்கப்படுபவர்.

அறிவிப்பு

**சித்த மருத்துவ முகாம்**

அன்பிற்கினிய பொதுமக்களே!

பாலக்காடு சித்தூரில் உள்ள ஆரம்ப சுகாதாரத் துறையின் சார்பாக தேசிய சித்தமருத்துவ தினமான ஜனவரி இரண்டாம் நாள் புதன்கிழமை அன்று காலை 10 மணியளவில் சித்த மருத்துவ முகாம் நடைபெற உள்ளது. இம்முகாமில் பிரபல சித்த மருத்துவர் மற்றும் எழுத்தாளருமான கு. சிவராமன் அவர்கள் கலந்து கொண்டு உங்களின் நோய்கள் பற்றிய சந்தேகத்திற்கு விளக்கங்களையும் மற்றும் மருந்துகளின் பயன்பாட்டினையும் எடுத்துரைக்க உள்ளார்.

எனவே, பொதுமக்கள் இதில் கலந்துகொண்டு பயனடைவீராக!

அனுமதி இலவசம்!

பாலக்காடு — இவண்

30-12-25 — ஆரம்ப சுகாதார மைய அதிகாரி

DRAFT

## அலகு மதிப்பீடு

மொத்த மதிப்பெண் : 15

1. 1995 ஆம் ஆண்டு கேரள அரசால் 'வைத்தியரத்தினம்' என்ற விருது வழங்கிப் பாராட்டப்பட்டவர். (1)

    அ) அன்னை தெரசா ஆ) பாலாமணி அம்மா

    இ) லட்சுமி குட்டியம்மா ஈ) சுகதகுமாரி

2. மருத்துவம் பற்றிய பழமொழிகள் இரண்டினை எழுதுங்கள்? (2)
3. சித்த மருத்துவம் பற்றி சிறுகுறிப்பு எழுதுங்கள்? (3)
4. 'கல்வியும் இணையமும்' என்னும் தலைப்பில் அறிவியல் தினத்தில் உரையாற்றுவதற்கான சொற்பொழிவு தயார் செய்யுங்கள். (4)
5. 'அன்பு பேசி' என்னும் சிறுகதையின் மையக்கருத்து, பாத்திரப்படைப்பு, உத்திகள், மொழிநடை போன்றவற்றை விமர்சனம் செய்து எழுதுங்கள். (5)

DRAFT

# அலகுத் திட்டம்

வகுப்பு : 10

பாடம் : தமிழ் (BT)

அலகு : நலம் விரும்பு

முக்கிய கரு : ஆரோக்கியம்

முக்கிய கருத்துகள் :
- உணவே மருந்து
- பண்டைய உணவு முறைகள்
- ஆரோக்கியமான உணவு பழக்கங்கள்
- பழந்தமிழர் விருந்தோம்பல்
- சுகம் தரும் ஆரோக்கியம்

துணைக் கருவிகள் :
- பாடநூல்
- கரும்பலகை
- ஆசிரியர் கையேடு
- காணொளிக் காட்சி
- விளக்க அட்டை

| துணை அலகு | மொழி வெளியீட்டு வடிவங்கள் | கால அளவு |
|---|---|---|
| **அமுத சுரபி**<br>• உணவே உயிர் | • கட்டுரை (குறிப்பு கொடுதல்)<br>• விளக்கக் குறிப்பு<br>• விளம்பரம்<br>• தலையங்கம் | 3 |
| • சோற்றுக்கு வந்த பஞ்சம் | • பட்டியலிடுதல்<br>• விளக்கக் குறிப்பு<br>• சொற்பொழிவுக் குறிப்பு | 2 |
| • பழைய சோறு | • பட்டிமன்றக் குறிப்பு | 2 |
| **நோய் நாடி**<br>• வன மூதாட்டி | • கட்டுரை<br>• குறிப்பு<br>• துண்டுப்பிரச்சுரம்<br>• சொற்பொழிவுரை<br>• பட்டியலிடுதல் | 3 |

DRAFT

| | | |
|---|---|---|
| • சுகம்தரும் சித்த மருத்துவம் | • உறுதி மொழி<br>• விளக்கக் குறிப்பு<br>• அறிவிப்பு | 2 |
| • சித்த மருத்துவம் சிறந்ததவே | • நயம் பாராட்டுதல்<br>• விளக்கக் குறிப்பு<br>• விமர்சனக் குறிப்பு | 2 |
| **டிஜிட்டல் உலகு**<br>• வாமனம் தோற்றதம்மா | • சொற்பொழிவுரை<br>• விமர்சனம்<br>• இதழ் வெளியீடு/தயாரித்தல் | 3 |
| • அன்பு பேசி | • விமர்சனம்<br>• கலைச் சொல் அகராதி<br>• கடிதம் | 2 |
| • மருத்துவ நேர்காணல் | • கட்டுரை<br>• விவாதக் குறிப்பு<br>• பத்திரிகை செய்தி | 2 |

எதிர் பார்க்கும் படைப்புகள் : இதழ் வெளியிடுதல்

மதிப்பீடு : இதழில் கொடுக்கப்பட்டுள்ள மொழி வெளியீட்டு வடிவங்களை தரமதிப்பீட்டின் அடிப்படையில் மதிப்பீடு செய்தல்.

**தின விழா கொண்டாட்டங்கள்**

ஜூன் 5 – சுற்றுச்சூழல் தினம்
ஜூன் 12 – குழந்தை தொழிலாளர் ஒழிப்பு தினம்
ஜூன் 14 – உலக இரத்ததான தினம்
ஜூன் 19 – வாசிப்பு தினம்
ஜூன் 21 – உலக யோகா தினம்
ஜூன் 23 – உலக ஒலிம்பிக் தினம்
ஜூலை 1 – வன திருவிழா
ஜூலை 11 – மக்கள் தொகை தினம்
ஜூலை 21 – சந்திர தினம்
ஜூலை 28 – உலக இயற்கை பாதுகாப்பு தினம்
ஆகஸ்ட் 12 – உலக இளைஞர்கள் தினம்
ஆகஸ்ட் 15 – சுதந்திர தினம்

DRAFT

DRAFT

## அன்றாடத் திட்டம் (மாதிரி)

| | | |
|---|---|---|
| வகுப்பு | : | 10 |
| பாடம் | : | தமிழ் (BT) |
| அலகு | : | நலம் விரும்பு |
| துணை அலகு | : | அமுத சுரபி |
| பாடப்பகுதி | : | உணவே உயிர் |
| நேரம் | : | 40 நிமிடங்கள் |
| கற்றல் இலக்கு | : | பழந்தமிழர் உணவின் சிறப்புகளை வலியுறுத்தி பல்வேறு செயல்பாடுகளில் ஈடுபடுகிறார்கள். |

துணைக் கருவிகள் :

- பாடநூல்
- ஆசிரியர் பனுவல்
- கரும்பலகை
- காணொளிக் காட்சி
- விளக்கத்தாள்

| கற்றல் செயல்பாடுகள் | பிரதிபலிப்புகள் |
|---|---|
| **நுழைவுச் செயல்பாடு**<br>ஆசிரியர் மாணவர்களின் நலம் விசாரிக்கும் பொருட்டு இன்று உண்ட உணவினை பற்றி மாணவர்களிடம் கேட்டல்.<br>மாணவர் கூறும் உணவின் பட்டிலை கரும்பலகையில் ஆசிரியர் எழுதுதல் அதற்கு பின் மாணவர்களிடம் இதில் எவையெல்லாம் பாரம்பரிய உணவுகள் மற்றும் துரித உணவுகள் என கேட்டல் மாணவர்கள் கூறிய பதில்களுடன் ஆசிரியர் "பாரம்பரிய உணவு மற்றும் தூரித உணவுகளின்" காணொளி மூன்றினை காண்பித்தல் சரியான பதிலை கூறிய மாணவர்களை பாராட்டி பாடப் பகுதிக்குள் நுழைதல். | |

**செயல்பாடு 1**

- ஐவகை நிலங்களின் பெயர்களின் குழுவின் பெயராக கொண்டு மாணவர்களை குழுக்களாக பிரித்தல்.
- குழுக்களாக பிரித்த பின்னர் பாடப்பகுதிகளை வாசித்து
  - ➢ உணவின் முக்கியத்துவம்
  - ➢ தமிழ் இலக்கியத்தில் உணவின் பங்கு
  - ➢ ஐந்நில மக்களின் உணவு பழக்கவழக்கங்கள்

  என்பதன் அடிப்படையில் குறிப்புகளை தயார் செய்ய சொல்லுதல்.
- ஒவ்வொரு குழுக்களும் தங்கள் கருத்தை வெளிப்படுத்தும் போது ஆசிரியர் அதை மறுபடியும் உரத்த குரலில் கூறுதல்.
- கீழே மாணவர்கள் எழுதிய குறிப்புகளை கரும்பலகையில் ஆசிரியர் எழுதுதல.

**உணவின் முக்கியத்துவம்**

- உயிரினங்கள் என்றால் உணவுண்டு வாழ்பவை என்று பொருள்
- உணவு, உடை, உறைவிடம் இம்மூன்றும் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதவை.
- உடையும் உறைவிடமும் இல்லாமல் வாழ்ந்திடலாம். ஆனால் உணவின்றி வாழ முடியாது.

**தமிழ் இலக்கியத்தின் பங்கு**

- பசியை பிணி என்று கூறுவர் அப்பசியை நீக்குவாரை பசிப்பணி மருத்துவர் என புறநானூற்று நூல் கூறுகிறது.
- பசி இல்லாமல் நோய் நொடிகள் இல்லாமல் மக்கள் இனிதே வாழ வேண்டும் என ஐங்குநூறு சொல்கிறது.

DRAFT

- பசியும் நோயும் பகையும் இல்லாதிருப்பதே ஒரு சிறந்த நாட்டின் இலக்கணம் என்கிறோம் வள்ளுவர்.

**ஐந்தில மக்களின் உணவு பழக்கவழங்கள்**

- ஐந்நில பெயர்களை எழுதுதல்
- ஒவ்வொரு நிலப்பகுதியில் கிடைக்கும் உணவுப் பொருட்கள்
- ஊன் சோறு பற்றிய சிறப்புகளை கூறுதல்.
- அனைத்து குழுக்களுக்கும் ஆசிரியர் பாராட்டுக்களை தெரிவித்தல்.

## செயல்பாடு 2

- உலக உணவு தினமான அக்டோபர் 16–ஆம் தேதி அன்று உங்கள் பள்ளியில் நடைபெறும் உணவு கண்காட்சிக்கான விளம்பரம் தயார் செய்ய சொல்லுதல்.

**விளம்பரத்தின் வழிமுறைகள்**

- ➢ சிறந்த தலைப்பு
- ➢ நடைபெறும் நாள்
- ➢ நடைபெறும் நேரம்
- ➢ நடைபெறும் இடம்
- ➢ உணவின் வகைகள்
- ➢ தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

- இதனடிப்படையில் மாணவர்கள் குழுக்களாக பிரிந்து விளம்பரங்களை தயார் செய்தல்.
- மாணவர்கள் தயார் செய்த விளம்பரங்களை குழுக்களாக வந்து வகுப்பில் காண்பிக்க சொல்லுதல்.
- அதை பற்றிய விளக்கங்களை ஆசிரியர் கூறுதல்.
- விளம்பரம் தயாரித்த அனைத்து மாணவர்களையும் பாராட்டுதல்.
- விளம்பரம் தயாரிப்பதில் தொடர்பாடுகள் உள்ள மாணவர்களுக்கு ஆசிரியல் உதவுதல்.

DRAFT

- அதற்கு பின் விளம்பரத்தின் ஒரு மாதிரியை ஆசிரியர் விளக்கத்தாளில் மாணவர்களுக்கு காண்பித்தல்.

**உணவுத் திருவிழா**

16-10-2025

அரசு உயர் நிலைப் பள்ளி மூணார்

- அறுசுவை உணவுகள்
- சிறுதானிய உணவுகள்
- பாரம்பரிய உணவுகள்
- மூலிகை உணவுகள்
- உணவின் கண்காட்சி

**அனுமதி இலவசம்**

- இவ்விளக்கத்தாளின் அடிப்படையில் குழுக்கள் உருவாக்கிய விளம்பரத்தை மதிப்பிடச் சொல்லுதல்.
- விளம்பரத்தின் மாதிரியை குறிப்பேட்டில் எழுத சொல்லுதல்.
- பின்தங்கிய மாணவர்களிடம் அவர்களுக்கு பிடித்த உணவுகளை பற்றி கூறச் செய்தல்.

## தொடர் செயல்பாடு

- பண்டைய கால உணவுகளை பட்டியலிடுக.
- உனக்கு பிடித்த உணவொன்றினை தயார் செய்யும் முறையினை அம்மாவிடம கேட்டு வருக (பின் தங்கிய மாணவர்கள்)

DRAFT

## வினாத்தாள் மாதிரி

## தமிழ் முதல் தாள் (AT)

நேரம் : $1^1/_2$ மணி மதிப்பெண்:40

**சரியான விடையை தேரந்தெடுத்து எழுதுங்கள்** (2×1=2)

1. உணர்ச்சி கவிஞர் என அழைக்கப்படும் கவிஞர் யார்?

(அ) கல்பனா சன்யாசி (ஆ) ரா.பி. சேதுபிள்ளை

(இ) கவிஞர் சிங்காரவேலன் (ஈ) வா.செ. குழந்தை சாமி

2. "பசிப்பிணி மருத்துவன் இல்லம் அணித்தோ" என்ற பாடல் வரி இடம் பெறும் நூல் எது?

(அ) ஐங்குறுநூறு (ஆ) புறநானூறு

(இ) பரிப்பாடல் (ஈ) அகநூனூறு

**3 முதல் 5 வரையுள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** (3×2=6)

3. ஏற்றபடி இணைத்து எழுதுக.

குறிஞ்சி – வெண்சோறு

முல்லை – கொழியரி கூழ்

மருதம் – செந்நெல் சோறு

நெய்தல் – தினையரசிச் சோறு

பாலை – மூங்கிலரிசிச் சோறு

4. கீழ்வரும் கூற்றுகளில் சிந்த மருத்துவம் தொடர்புடைய கூற்றுக்களை எடுத்து எழுதுக.

- சித்த மருத்துவம் என்பது வட இந்தியாவின் மருத்துவ முறையாகும்.
- பண்டைய சித்தர்கள் இதனை உருவாக்கியுள்ளனர்.
- மூலிகை மற்றும் தாதுப்பொருட்களை பயன்படுத்தி உருவாக்கப்பட்ட ஒரு மருத்துவ முறையே சித்த மருத்துவம்.
- மின்னுவதெல்லாம் பொன்னல்லா என்ற பழமொழி சித்த மருத்துவத்துடன் தொடர்புடையது ஆகும்.

5. டிஜிட்டல் என்பது அடிமைத்தமையாது என்ற கூற்றை நிருபிக்கும் பொருட்டு இரண்டு காரணத்தை எழுதுக..

**6 முதல் 11 வரையுள்ள வினாக்களில் எவையேனும் ஐந்தனுக்கு விடையளிக்கவும்.** (5×3=15)

6. உங்கள் ஊரிலுள்ள ஆரம்ப சுகாதாரத் துறையின் சார்பாக ஒரு சித்த மருத்துவ முகாம் தேசிய சித்த மருத்துவ தினமான ஜனவரி 2–ஆம் நாள் நடைபெற உள்ளது இதை ஊர் மக்களுக்கு தெரிவிக்கும் பொருட்டு அரிவிப்பு தயார் செய்யுங்கள்.

7. தூய தமிழ்நடையில் எழுதுங்கள்.

   இந்த ஒரு சமூக வலைதளத்திலெ ஆண்கள் பெண்களை ரொம்ப எமாந்திறாங்களாம் அதுவும் ஊ மாதிரி சின்ன பொண்ணுங்களை இப்ப நீ என்ன சொல்ல வர்றே என்னை நீ சோசியல் மீடியா பக்கமே போகாதேன்று செல்றீயா?

8. உருவினில் சிறுத்தாய் ஆற்றும்
   உரத்தினில் வளந்தாய் விஞ்சை
   கருவி நீ அறிவின் ஆற்றல்
   காட்டினை புதுயுகத்து

   இப்பாடல் வரிகளை விமர்சனம் செய்து எழுதுக.

9. கீழ்க்காணும் வாழ்க்கை குறிப்பை தன்விவர பட்டியலாக மாற்றி எழுதுங்கள்.

   சோ. தர்மன் அவர்கள் 1953–ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 8–ஆம் தேதி தூத்துக்குடி மாவட்டம் உருளைக்குடி என்ற ஊரில் பிறந்தார் சோலையப்பன், பொன்னுத்தாய், இவருடைய பெற்றோர் ஆவர். "கூகை", "சூல்", "தூர்வை" போன்ற நாவல்களையும் "ஈரம்", "நீர்ப்பழி" போன்ற சிறுகதை தொகுப்புகளையும் வெளியிட்டுள்ளார். 2019–ஆம் ஆண்டில் சாகித்ய அகாதமி விருதினையும் சுஜாதா மற்றும் மனோன்மணியம் சுந்தரனார் விருதுகளையும் பெற்றுள்ளார்.

10. உலக உணவு தினத்தன்று உங்கள் பள்ளியில் நடைபெறும் உணவு கண்காட்சிக்கான விளம்பரம் தயார் செய்யுங்கள்.

11. ஐந்நில உணவுப் பொருள்கள் பற்றி சிறு குறிப்பு எழுதுக.



DRAFT

**12 முதல் 15 வரையுள்ள வினாக்களில் எவையேனும் மூன்றனுக்கு விடையளிக்கவும்.** (3×4=12)

12. அதிக ஊடகம் பயன்பாட்டால் உடலுக்கு மனதிற்கும் ஏற்படும் விளைவுகளை குறித்து உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக.

13. உடல் ஆரோக்கியத்திற்கு உகந்தது பாரம்பரிய உணவுகளை துரித உணவுகளே என்னும் தலைப்பில் நடைபெறும் பட்டி மன்றத்தில் பேசுவதற்கு குறிப்பு தயாரியுங்கள்.

14. குடலின் தூய்மை உடல் தூய்மை
கொல்லும் நோய்களை இது உண்மை
உடலின் பசையை புகை என்பீர்
உயிரை மாய்ப்பது குடி என்பீர்

என்னும் பாடல் வரிகளை நயம் பாராட்டி எழுதுக.

15. பின்வரும் பகுதியை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

உயிரினங்கள் என்றால் உணவுண்டு வாழ்பவை என்பது பொருள். உணவு, உடை, உறைவிடம் இம்மூன்றும் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதவை ஆகும். இதை தான் உண்டி உறையுள் உடுக்கை இவை ஈந்தார் பண்டிதராய் வாழ்வார் என ஏலாதி என்ற அறநூல் கூறிற்று இவர்கள் உடையும் உறைவிடம் இன்றி வாழ்ந்துவிடலாம். ஆனால் உணவின்றி அவ்வுயிரிக்கும் வாழ்தல் அரிது.

(அ) உண்டி உறையுள் உடுக்கை இவை ஈத்தார் பண்டிதராய் வாழ்வார் என கூறும் நூல் எது?

(ஆ) மனித வாழ்க்கைக்கு இன்றிமையாதவை எவை?

(இ) உயிரினங்கள் என்பதந் பொருள் என்ன?

(ஈ) எது இல்லாமல் உலக உயிர்களால் வாழ முடியாது.

**16 முதல் 17 ஆகிய வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்கவும்.** (1×5=5)

16. ஆரோக்கியமான வாழ்க்கைக்கு உணவு முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை வலியுறுத்தி தலையங்கம் எழுதுங்கள்.

17. அதிகமான டிஜிட்டல் பயன்பாடும் பாதிப்புகளும் என்னும் பொருளில் கட்டுரை தயாரியுங்கள்.

DRAFT